பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 17 வெள்ளிக்கிழமை 02.02.2024 கதிர் 87

# ஜனநாயக கட்டமைப்பையே முடக்க ரணில் கடும் முயற்சி

## டலஸ் எம்.பி. பகிரங்கக் குற்றச்சாட்டு

அனைத்துவிமான மக்களின் இறைமையையும் ஜனநாயகக் கட்டமைப்பையும் முடக்கும் ரணில் முயற்சிக்கிறார் என்று சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெருமகுற்றஞ்சாட்டினார். அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காக ஒருவர் எடுத்துள்ள இறுதிக்கட்ட முயற்சிகள் இவை என்றும் விமர்சித்துள்ளார்.

நாவலவில்உள்ளஅக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது: அரசமைப்பு பேரவை 2

## இது ரகசியம் அல்ல!

இலங்கை இராணுவத்தின் முன்னாள்தளபதிஜெனரல்தயாகமகே ஜனவரி 29 திடீரென ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துக்கொண்டார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் விசுவாசி என்று அறியப்பட்டவர்அவர். மகிந்தராஜபக்ச அரசுத் தலைவராக அதிகாரத்தில் இருந்தபோது, விடுதலைப்புலிகளின் மறுவாழ்வுப் பணியகத்தின் பணிப்பாளர் என்கிற முக்கியமான பணியில் இருந்தவர். சரணடைந்த புலிகளைச் சமூக மயப்படுத்தும் திட்டத்தை, அதாவது அவர்களைப் புலிநீக்கம் செய்து மீண்டும் சமூகத்திற்குள் விடும் பொ-றுப்பான பணியை இவரை நம்பித்தான் ராஜபக்சக்கள் ஒப்படைத்திருந்தனர்.

பின்னர் இராணுவத் தளபதியாகவும் பதவி 2

# நிகழ்நிலை காப்புச் சட்டம் நேற்று அமுலுக்கு வந்தது

## சான்றுப்படுத்தினார் சபாநாயகர்

ஜனவரி 23, 24 இரு தினங்களும் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தை சபாநாயகர்மஹிந்தயாப்பாஅபேவர்தன நேற்று சான்றுரைப்படுத்தினார்.

இதற்கமைய இந்தச் சட்டமூலம் 2024ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டமாக 2

# சிறீதரன் ஒற்றுமையை விரும்புவாரானால் தமிழ் அரசு எமது அணியில் இணையட்டும்

## ரெலோ எம்.பி. கருணாகரம் தெரிவிப்பு

சிறீதரன் ஒற்றுமையை விரும்பினால் தமிழ் அரசுக் கட்சி எமது அணியில் (ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில்) இணைந்துகொள்ள முடியும் என்று ரெலோவின் செயலாளர் நாயகமும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன்கருணாகரம் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடியில் ஊடகங்களுக்கு நேற்றையதினம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் புதிய தலைவர் 2009 இற்கு முன்பு இருந்த தைப்பொன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார். அது வரவேற்கத்தக்கது.

ஆனால், நாம் ஐந்து கட்சிகளாகக் கூட்டுச் சேர்ந்து பதிவு செய்யப்பட்ட 14

# பொலிஸ் விசாரணையின் பின்பே நாடாளுமன்ற பணியாளர்கள் கைது

## செயலாளர் நாயகம் விளக்கி அறிக்கை

நாடாளுமன்றத்தில் பணியாற்றும் பெண்களிடம் பாலியல் முறைகேடுகளில் ஈடுபட்டனர்என்றகுற்றச்சாட்டின் கீழ்பணியாளர்கள்மூவர் கைது செய்யப்பட்டமை பொலிஸாரின் முதற்கட்ட பூர்வாங்க விசாரணையின்பின்பே இடம்பெற்றது என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் கனிஷ்ட பணியாளர் மூவர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து தெளிவுபடுத்தும்முகமாக வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாடாளுமன்றத்தின் வீட்டுப்பராமரிப்புத் 2

## நிகழ்நிலை காப்புச் சட்டத்தில்

# நீதிமன்றத்தின் பரிந்துரைகள் விடுபட்டிருந்தால் பிரச்சினை

## சுமந்திரன் எம்.பி. எச்சரிக்கை

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தில் உயர்நீதிமன்றத்தின்பரிந்துரைகள் உள்ளடக்கப்படாது விட்டால்அதுபெரும்சட்டப் பிரச்சினையை உருவாக்கும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

உயர் நீதிமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த நாடாளுமன்ற அமர்வில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தில்உயர்நீதிமன்றத்தின் பரிந்துரை பட்டியலில் உள்ள விடயங்கள் முழுமையாக உள்ளடக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டு அவற்றை உள்ளீர்க்குமாறு 14

# ஜனாதிபதிக்கு இடையூறு செய்யாதீர் அது அரசமைப்பை மீறுகின்ற செயல்

## அரசமைப்பு பேரவைக்கு ரணில் அறிவுறுத்து

ஜனாதிபதியின் அரசமைப்புக்கு அமைவான பணிகளை முன்னெடுப்பதற்குச் செய்யப்படும்எந்தவொரு இடையூறும்அரசமைப்பு மீறலாகவே கருதப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

'ஜனாதிபதி மற்றும் அரசமைப்பு பேரவையின்அரசமைப்பு ரீதியான பொறுப்பை நிறைவேற்றுதல்' என்ற தலைப்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடகஅறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மாஅதிபரை நியமனம் செய்வதில் அரசமைப்புப் 2

# ஜனாதிபதியின் வெளிநாட்டு பயணங்கள் மீதான குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை

## இராஜாங்க அமைச்சர் பாலசூரிய தெரிவிப்பு

ஜனாதிபதியின் வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள் தொடர்பில் சிலரால் முன்வைக்கப்படும்குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் அயலுறவுத்துறை அமைச்சர் ஆகியோர் சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற 8

# சிஐடியிடம் வாக்குமூலம் வழங்குமாறு அமைச்சர் கெஹலியவுக்கு உத்தரவு

## மாளிகாகந்த நீதிமன்றம் விடுத்தது

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு இன்றுகாலை9மணிக்கு சென்று வாக்குமூலம் வழங்க வேண்டுமென அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு மாளிகாகந்த நீதிவான் லோச்சனா அபேவிக்கிரம நேற்று உத்தரவிட்டுள்ளார்.

போலி ஹியுமன் இம்யூனோகுளோபின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சட்டமா 8

## சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு கேட்டு நேற்று தொடங்கிய

# சுகாதார தொழிற்சங்கங்களின் போராட்டம் இன்றும் தொடரும்

## வைத்தியசாலைகளில் படையினர் கடமையில்



72தொழிற்சங்கங்கள் நேற்றுக் காலை 6.30 முதல் பணிப்புறக்கணிப்பில் குதித்துள்ளன. இதனால்வைத்தியசாலைகளில் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது. சிகிச்சை பெறுவதற்கான வருகை தந்தவர்கள் நெருக்கடிகளுக்கு உள்ளாகினார்கள். இந்தப் போராட்டம் இன்றும் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து முப்படையினரும் களமிறக்கப்பட்டு வைத்தியசாலைகளின் பணிகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. கொழும்பு தேசிய வைத்தியசாலை 2

# அதிகாரத்தில் இருக்கும்போது அந்நியன் இல்லையேல் அம்பியாகிவிடுவார் ரணில்

## போட்டுத் தாக்குகிறார் சாணக்கியன் எம்.பி.

அதிகாரத்தில் இருக்கும்போதுஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்நியனாகமாறுவதுடன் அதிகாரம்இல்லாவிட்டால் அம்பியாகமாறிவிடுவார் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கடுமையாக விமர்சித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை ஜனாதிபதி தொடர்பில் இந்த விமர்சனத்தை முன்வைத்தார். அவர்மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சியில் இருந்தபோது ஜனாநாயகம் குறித்துப் பேசினார். தமிழ் மக்களுக்கான தீர்வு, ஊடகச் சுதந்திரம் குறித்தெல்லாம்பேசினார். ஊடகநிறுவனங்கள்மீது தாக்குதல்நடத்திய 2

## இனி இது .....

வகித்தவர். ஓய்வு பெற்ற பின்னர், 2019 கோட்டாபய அரசுத் தலைவராகப் பதவியேற்றதும் அவருக்கு கைத்தொழில் அமைச்சின் செயலாளர் பதவி வழங்கப்பட்டது. அதற்கு முன்னர் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பணிப்பாளராகவும் பதவி வகித்துள்ளார். இந்தப் பதவி இலங்கை நிர்வாக சேவைத் தரத்தின் அதி மூப்பு நிலை அதிகாரிகளுக்குரியது. எனினும் இத்தகைய உயர் சிவில் பதவிகளில் தனக்கு ஆதரவான இராணுவ அதிகாரிகளையும் ஓய்வுபெற்ற அதிகாரிகளையும் நியமிப்பதன் மூலம் தனது பிடியை இறுக்கி வந்தார். அப்படி அவரால் நம்பிக்கையுடன் நியமிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளில் ஒருவர் தயா ரத்நாயக்க.

அப்படிப்பட்டவர், ராஜபக்சக்களுக்கு விசுவாசி என்று அறியப்பட்டவர் திடீரென்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்டார். அவருக்கு கட்சியில் ஆலோசர் பதவியும் வழங்கப்பட்டது. இது ராஜபக்சக்களின் பரம விரோதியான ஜெனரல் சரத் பொன்சேகாவுக்குப் பிடிக்கவில்லை. தயா ரத்நாயக்க கட்சியில் சேர்ந்த மறுநாளே செய்தியாளர்களைச் சந்தித்த சரத் பொன்சேகா ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஒரு பிடி பிடித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஒன்றும் சஜித்தின் தனிப்பட்ட சொத்து அல்ல, அது எல்லோரும் சேர்ந்து கட்டியெழுப்பிய அமைப்பு, அதில் அவர் நினைத்தமாதிரியெல்லாம் ஆட்களைச் சேர்த்துக்கொண்டு நடக்க முடியாது என்று தொடங்கி தயாரத்நாயக்க உட்படப் பலரையும் கிழி கிழி என்று கிழித்துத் தொங்கவிட்டிருந்தார். ஜனவரி 31 இந்தச் செய்திகள் பத்திரிகைகளில் வெளியாகி இருந்தன.

பெப்ரவரி முதலாம் திகதி தயா கமகே பொரள்ளையில் உள்ள மௌபிம ஜனதா கட்சியின் தலைமையகத்தில் அந்த கட்சியின் தலைவரான திலித் ஜயவீரவை சந்தித்து அணைத்தபடி சிரித்துக்கொண்டிருக்கும் ஒளிப்படங்கள் ஊடகங்களில் வெளியாகின. திலித் ஜயவீரவும் ராஜபக்சவிசுவாசிகளில் ஒருவர்தான். தெரண ஊடக வலையமைப்பின் உரிமையாளர். இலங்கையின் மிக முக்கிய வர்த்தகப்புள்ளிகளில் ஒருவர். 2019 கோட்டாபயவை ஆதரித்த வியத்கம குழுவின் உறுப்பினர். அவரது ஊடக வலையமைப்பு எல்லா எல்லைகளையும் மீறி கோட்டாவை அந்தத் தேர்தலில் ஆதரித்து வெற்றி பெற வைத்தது.

பொது ஜன பெரமுன கட்சியின் மூலம் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராகும் கனவோடு இருந்தவர். ஆனால், அவர் கோட்டாவின் ஆள் என்பதாலும் கோட்டாவின் செயற்பாடுகளால் ஏற்கனவே கட்சியின் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ள நிலையில் இருந்ததாலும் கட்சிக்குள் திலித் ஜயவீரவை வேட்பாளர் ஆக்குவதற்கான சாதக நிலமை எதுவும் இருக்கவில்லை. அதனால் மௌபிம ஜனதாக் கட்சியை விலைக்கு வாங்கி அவர் அரசியலில் குதித்துவிட்டார் என்கிறார்கள். அத்தகைய திலித்துடன்தான் இப்போது தயா ரத்நாயக்க காட்சியளித்தார்.

தான் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்ததை விரும்பாது சரத் பொன்சேகா கடுமையாக விமர்சித்ததை அடுத்தே தயா ரத்நாயக்க திலித்துடன் சேர்ந்தார் என்று கூறப்படுகின்றது. மௌபிம ஜனதா கட்சியின் தலைமையகத்திற்குச் சென்று கட்சியின் தலைவர் திலித் ஜயவீரவுடன் கலந்துரையாடிய பின்னர் "மன்னித்துக்கொள்ளுங்கள்" எனக்கூறியுள்ளார் தயாரத்நாயக்க. அவர் யாரிடம் எதற்காக இப்படி மன்னிப்புக் கேட்டார் என்பது தெளிவுபடுத்தப்படவில்லை என்றாலும், சேர்ந்து- இரண்டே நாட்களில் கட்சி தாவிவிட்டார் என்றும் தன்னைக் கட்சியில் சேர்த்துக்கொண்ட சஜித்துக்குத்தான் மன்னிப்புக் கூறினார் என்றும் அரசியல் பரப்பில் பொழிப்புரைகள் வழங்கப்படுகின்றன.

அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, ஜெனரல் தயா ரத்நாயக்க, மௌபிம ஜனதா கட்சியில் இணைந்துக்கொண்டார் என வெளியான செய்தி முற்றிலும் பொய்யானது என ஐக்கிய மக்கள் சக்தியின் மூத்த பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். ஒருவேளை அந்தச் செய்தியில் உண்மை இருந்தால், தொழில்முறை அரசியல்வாதிகள் செய்ததை விடவும் மிக மோசமான கட்சித் தாவலாக அவரது அரசியல் பயணம் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## ஜனநாயக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தமாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவிப்பொன்றை விடுத்துள்ளது. 17ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமாக அரசமைப்பு பேரவை உள்ளிட்ட சுயாதீனநிறுவனங்களை அறிமுகப்படுத்தியதில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பெரும் பங்குண்டு.

தற்போது தன்வேலையில் தலையீடு செய்ய முடியாது என்று ஜனாதிபதி அறிவித்து, அந்நிறுவனத்தினை கட்டுப்படுத்த வதற்கு முனைகின்றார். ஒரு பக்கத்தில் நீதித்துறையுடனும் அவர் மோதும் நிலைமைகள் உள்ளன.

நீதிமன்றத்தீர்ப்புக்கள்கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. நீதிமன்றங்களில் தீர்ப்புகள் வழங்கப்பட்டவுடன் நீதிபதிகளை நாடாளுமன்றத்திற்கு அழைத்து வருவதற்கு முயற்சிக்கின்றார்கள்.

தேர்தல் ஆணைக்குழுவிற்கு எதிராக நாடாளுமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப் படுகின்றன. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை அரச தலைவர் நேரடியாக வெளிப்படையாகவே விமாசிக்கின்றார்.

தற்போது ஊடகங்களை முடக்கும் வகையில் நிகழ்நிலை காப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. உள்ளுராட்சி மன்றங்கள் முடக்கப்பட்டுள்ளன. மாகாண சபைகள் முடக்கப்பட்டுள்ளன. அரசமைப்பு பேரவை, நீதித்துறை, போன்ற சுயாதீனக் கட்டமைப்புக்கள் முடக்கப்படும் நிலைக்கு வந்துள்ளன. இது அனைத்துவிமான மக்களின் இறைமையையும் ஜனநாயகக் கட்டமைப்பையும் முடக்கும் செயலாகும். அதிகாரத்தை தக்கவைப்பதற்காக ஒருவர் எடுத்துள்ள இறுதிக்கட்ட முயற்சியாகும்.

## ஜனாதிபதிக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவைக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல் குறித்து இந்த அறிக்கை ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது. அறிக்கையில் அது பற்றி நேரடியாகக் குறிப்படவில்லை என்கிறபோதும், பொலிஸ் மா அதிபரின் நியமனம் தொடர்பில் இரு தரப்பினருக்கும் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளின் பின்னணியில் இந்த அறிக்கை வெளிவந்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசமைப்பின் மூலம் நிறுவப்பட்ட நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தலைமையிலான அரசமைப்பு பேரவை நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதியாகச் செயற்படுகிறது. ஜனாதிபதி அரசமைப்பிற்கு அமைவான பணிகளை முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்பையும் அரசமைப்புப் பேரவை வழங்குகிறது.

ஜனாதிபதி அரசமைப்பிற்கு அமைவான தனது பணிகளை முன்னெடுப்பதற்கு செய்யப்படும் எந்தவொரு இடையூறுகளும் அரசமைப்புமீறலாகவே கருதப்படும்

அரசமைப்பின் 4(ஆ) உறுப்புரையின் கீழ் இலங்கை ஜனநாயகக் குடியரசின் ஜனாதிபதி, இலங்கையின் தேசிய பாதுகாப்பு உட்பட மக்களின் நிறைவேற்று அதிகாரத்தைச் செயற்படுத்துகிறார்.

இலங்கையின் தேசிய பாதுகாப்பு தொடர்பான அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, நிறைவேற்று அதிகாரத்தின் பிரதானி என்ற வகையில், அரசமைப்பில் குறிக்கப்பட்டுள்ள நடைமுறைக்கு அமையவும் ஜனாதிபதியின் அரசமப்பு ரீதியான பொறுப்பிற்கு அமையவும் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட உயர் அரச பதவிகளுக்கு நியமனங்களை வழங்குவதற்கு அரசமைப்பு ரீதியாக ஜனாதிபதி கடமைப்பட்டுள்ளார்.

எனவே, ஜனாதிபதி தனது அரசமைப்பு ரீதியான கடமைகளை எந்தவித இடையூறும் அல்லது தடைகளும் இன்றிச் செய்யவேண்டும். அரசமைப்பின் 41(ஈ) உறுப்புரையின் கீழ், பொலிஸ்மா அதிபரின் நியமனம், ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கு அரசமைப்புப் பேரவையின் அங்கீகாரம் கிடைத்த பின்னரே மேற்கொள்ளப்படுகிறது.

ஜனாதிபதியின் அரசமைப்புக்கு அமைவான பணிகளை முன்னெடுப்பதற்குச் செய்யப்படும் எந்தவொரு இடையூறும் அரசமைப்பு மீறலாகவே கருதப்படும். ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி அரசமைப்புக்கு முரணாகத் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தினால், அதற்கான நடவடிக்கைகளும் அரசமைப்பிலேயே வழங்கப் பட்டுள்ளன.

அரசமைப்பு பேரவையானது அரசமைப்பிற்கு அமைவாக தனது கடமைகளை மேற்கொள்வதற்குக் கடமைப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 41(ஈ) உறுப்புரையின் பிரகாரம், பொலிஸ்மா அதிபரை நியமிப்பது தொடர்பான தனது கடமையை மேற்கொள்ளாமல் தவிர்க்குமாறு அரசமைப்பு பேரவைக்கு பணிப்பது அரசமைப்பை மீறும் செயலாகும்.

சபாநாயகர் நாடாளுமன்றத்தின் பிரதானி என்பதுடன், அரசமைப்பிற்கமைய நாடாளுமன்றத்தினால் நீதிமன்றத்தின் ஊடாக மக்களின் நீதிமன்ற அதிகாரம் செயற்படுத்தப்படுகிறது. அதன்படி, நாடாளுமன்றம் மக்களுக்கு மாத்திரமே பொறுப்புக்கூறவேண்டும் என்றுள்ளது.

## அதிகாரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது குரல் கொடுத்தார்.

இன்று அவர்தான் நிகழ்நிலைச் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்து அனைத்து ஊடகங்களையும் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

எரிபொருள் விலைச் சூத்திரம் குறித்து மக்களுக்குப் போதிய தெளிவில்லாமல் இருக்கின்றது. மக்களுக்கு குறைந்த விலையில் எரிபொருள் வழங்க வேண்டிய காலப்பகுதியில் அது அதிகவிலைக்கே விற்பனை செய்யப்படுகின்றது.

இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்குவதாலேயே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. விலை அதிகரிப்பு செய்வதால் ஐஓசி மற்றும் சினோபெக் போன்ற நிறுவனங்கள் பெரும் இலாபத்தை பெற்றுக்கொள்கின்றன.

இது குறித்து அமைச்சர் கஞ்சன விஜயசேகரவிற்கு பல முன்மொழிவுகளை வைத்துள்ளோம். ஆனால் அதிகார மோகத்தில் அவர் எவருடைய பேச்சையும் கேட்பதில்லை - என்றார்.

## பொலிஸ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தைச் சேர்ந்த பெண் பணியாளர்கள் சிலர் 2022ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னர் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளானதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட பின்னர் என்னிடம் முறையிடப்பட்டது. கௌரவ சபாநாயகரின் ஆலோசனையின் கீழ் இது தொடர்பில் உள்ளக விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது.

விசாரணைக் குழுவின் அறிக்கை அண்மையில் எனக்குக் கையளிக்கப்பட்டதுடன், இது தொடர்பில் மேலதிக ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்காக இது சட்ட மா அதிபருக்கும் அனுப்பப்பட்டது. அறிக்கையை ஆராய்ந்த சட்டமா அதிபர், இந்தச் சம்பவம் குறித்து முதற்கட்ட முறைப்பாடு அவசியம் என ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதற்கு அமைய குறித்த அறிக்கை பொலிஸ் மா அதிபருக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பின்னர், பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு அமையவே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

நாடாளுமன்றத்தில் எந்தவொரு தரத்தில் இருப்பவர்களாலும் மேற்கொள்ளப்படுகின்ற அல்லது எனது சேவைக் காலத்திற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்கின்ற எந்தவொரு சட்டத்துக்கு விரோதமான நடவடிக்கை தொடர்பிலும் நாட்டின் சட்டத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்க நான் உள்ளிட்ட உயர் நிர்வாகம் எந்தவொரு தயக்கமும் காட்டாது என்பதையும், இது தொடர்பில் சபாநாயகரின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை தொடர்ச்சியாக எமக்குக் கிடைத்து வருகின்றது என்று மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றுள்ளது.

## நிகழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைக்கு வந்துள்ளது.

அத்துடன், நாடாளுமன்றத்தில் விவாதித்து திருத்தங்களுடன் கடந்த ஜனவரி மாதம் 9ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தேசிய நீரளவை சட்டமூலம் மற்றும் ஜனவரி மாதம் 10ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் ஆகியவற்றிலும் சபாநாயகர் தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

இதற்கமைய இந்தச் சட்டமூலங்கள் 2024ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க தேசிய நீரளவை சட்டம் மற்றும் 2024ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமாக நடைமுறைக்கு வருகின்றன.

## சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட முக்கிய வைத்தியசாலைகளில் இராணுவத்தினரும், பொலிஸாரும் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

தமது சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் ரவி குமுதேஷ் தெரிவித்ததாவது:

வைத்தியர்களுக்கு வழங்கப்படும் 35,000 ரூபா கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரி இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுகிறது. சம்பளக் கொடுப்பனவு உள்ளிட்ட நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கக் கோரி இதற்கு முன்னர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட போதிலும் ஆளும் தரப்பு உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளோம்.

சுகாதாரத்துறை சூழ்ச்சியான முறையில் பிளவுபடுத்தப்பட்டுள்ளது. சுகாதாரத்துறையின் உயர் பதவிகளில் உள்ளவர்களுக்கு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறையின் ஏனைய தரப்பினர் தொடாபில் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. நாம் ஒருநாள் பணிப்புறக்கணிப்புடன் இந்த விடயத்தினை முடிவுக்கு கொண்டுவருவதற்கு முயற்சித்தோம். ஆனால் சுகாதார அமைச்சானது எமக்கு எந்தவிதமான பதிலையும் வழங்கவில்லை. நிதி அமைச்சும் எம்மைப் பற்றி கருத்தில் கொள்ளவில்லை. பொறுப்புக்கூற வேண்டிய எவரும் எமக்கு நம்பிக்கை அளிக்கவில்லை. ஆகவே பணிப்பகிஷ்கரிப்பை நாளையும் (இன்றும்) முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம் - என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# மக்களை காப்பாற்ற இதுவே இறுதி வாய்ப்பு

## அமைச்சர் மனுஷ நாணயக்கார கூறுகிறார்

நாட்டைக் காப்பாற்றுவதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவே என அரசியல் கட்சி தலைவர்கள் தொடர்ந்து கூறிவந்தாலும், மக்களைக் காப்பாற்றுவதற்கான இறுதிச் சந்தர்ப்பமே இதுவென அமைச்சர் மனுஷ நாணாயக்கார தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை நிகழ்ச்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு அனுராதபுரத்தில் ஆரம்பமான நிலையில் அங்கு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இரண்டு வருடங்களுக்கு முந்தைய நிலைமை உங்களுக்கு நினைவிருக்கும் என நான் நம்புகின்றேன். இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த போது அனைவரும் பின்வாங்கியிருந்தனர்.

நாட்டை மீட்டு எடுக்கமுடியாது எனத் தெரிவித்தனர். இந்த நாடு இன்று இருக்கும் நிலைக்கு வந்திருப்பது ஓர் அதிசயம். அனைவரும் முடியாது எனத் தெரிவித்த சந்தர்ப்பத்தில் தற்போதைய ஜனாதிபதி நாட்டைக் கைப்பற்றினார். அவர் ஒரு தலைசிறந்த தலைவர். இந்த வரலாற்று சிறப்புமிக்க அனுராதபுரத்தில் இருந்து அந்த கதையை சொல்கிறேன். ரணில் விக்கிரமசிங்க கொள்கை இல்லாத, ஆனால் தீர்க்கமான முடிவுகளைக் கொண்ட தலைவர்.

நாட்டை காப்பாற்ற இதுவே கடைசி வாய்ப்பு என அனைவரும் கூறினர். ஆனால் மக்களைக் காப்பாற்றுவதற்கான கடைசி வாய்ப்பு இப்போது உள்ளது.

மக்களை காப்பாற்றக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்று நான் கூறுகிறேன்' என அமைச்சர் மனு நாணாயக்கார மேலும் தெரிவித்துள்ளார். (05)

## ஒட்டுசுட்டானில் கலந்துரையாடல்

(சண்முகம் தவசீலன்)

2024 வருடத்திற்குரிய வரவு - செலவுத்திட்டத்தினூடாக முறையான கிராமிய அபிவிருத்தி மூலம் பிரதேச ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து நாட்டின் நிலையான அபிவிருத்தியை இலக்காகக் கொண்டதுடன் வலுவான கிராமிய பொருளாதாரத்தை உருவாக்குவதன் மூலமாக பாரிய பொருளாதார இலக்கை அடைந்து தேசிய பணிக்கு பங்களிப்பு செய்தல் எனும் நோக்கில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 115 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு 20 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான அதிகாரிகளை தெளிவுபடுத்தும் விசேட கூட்டம் செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் திருமதி பரமோதயன் ஜெயராணி தலைமையில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான காதர் மஸ்தானின் பங்குபற்றுதலுடன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.

நிரல் அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் பிற நிறுவனங்களால் நிதி ஒதுக்கப்படாத பொருளாதார, சமூக, சமய மற்றும் கலாசார நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்குத் தேவையான பௌதீக உட்கட்டமைப்பை உருவாக்குதல் அல்லது சமூக நலனை இலக்காகக் கொண்ட கருத்திட்டங்களுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டதத்ன் கீழ் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை முறையாக முதலீடு செய்தலை உறுதிப்படுத்தல் வகையில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் கல்வி, சுகாதாரம், விவசாய, கமநலசேவைகள் திணைக்கள அதிகாரிகள், பிரதேச சபை செயலாளர், பிரதேச செயலக அதிகாரிகள், கிராம அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் குறித்து நிதிகளை எந்தெந்தவகையில் பயன்படுத்தமுடியும் எவ்வாறான வேலைத்திட்டங்களை தெரிவு செய்வது போன்ற விளக்கங்கள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன. (05)

## தணமல்வில பிரதேசத்தில் சிக்கியது கஞ்சாச் செடி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தணமல்வில பொலிஸ் நிலைய விசேட பொலிஸ் குழுவினர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சந்தேகத்திற்கிடமான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பில் அரை ஏக்கர் கஞ்சா தோட்டம், கசிப்பு மற்றும் காய வைத்த கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தணமல்வில பொலிஸார் (29)தெரிவித்துள்ளனர்.

சூரிய ஆற பிரதேசத்தில் மரக்கறி தோட்டத்திற்கு மத்தியில் சுமார் 6 அடி உயரமான 3921 கஞ்சா செடிகளுடன் சந்தேக நபரொருவரும், கிதுல்கொட மற்றும் கோமலிகம பிரதேசங்களில் கசிப்பு தயாரிப்பதற்கான 45,000 மில்லி லீற்றர் ஸ்பிரிட்டும், 2 கிலோ 200 கிராம் காய வைத்த கஞ்சாவுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என தணமல்வில பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)




## வீதிகளுக்கு பெயர்ப் பலகையிட கல்முனை மாநகர சபை திட்டம்

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட வீதிகளுக்கு பெயர்ப் பலகைகளை நிறுவும் வேலைத்திட்டம் புதன்கிழமை பிற்பகல் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச்.ஜௌஸி, பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தனியார் பங்களிப்புடனான நகர அழகுபடுத்தல் திட்டத்தின் ஓர் அங்கமாக முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் திட்டத்திற்கு அமானா வங்கி அனுசரணை வழங்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

கல்முனை மாநகர சபையின் கீழுள்ள 150 வீதிகளுள் கல்முனை-மட்டக்களப்பு மற்றும் கல்முனை-அக்கரைப்பற்று பிரதான வீதிகளில் இருந்து ஆரம்பிக்கும் 40 வீதிகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக பெயர்ப்பலகைகள் நிறுவப்பட்டுள்ளன.

கல்முனை மாநகர பிரதேசங்களில் நீண்ட காலங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்த பெரும்பாலான வீதிகளின் பெயர்ப் பலகைகள் சேதமடைந்தும் அழிவடைந்தும் காணப்பட்டதுடன் சில வீதிகளின் பெயர்ப் பலகைகள் இருந்த இடமும் இல்லாமல் போயுள்ளன. இதனால் வெளியிடங்களில் இருந்து வருகை தருகின்ற பயணிகள் மாத்திரமல்லாமல் உள்ளூர் மக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இக்குறைபாட்டைக் கருத்தில் கொண்ட மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, இது விடயத்தில் அதிக கரிசனையுடன் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இவ்வீதிகளுக்கு பெயர்ப் பலகையிடும் வேலைத் திட்டத்திற்கு அமானா வங்கி அனுசரணை வழங்க முன்வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆரம்ப நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.அமீர், அமானா வங்கியின் கல்முனை நகரக் கிளை முகாமையாளர் எம்.ரி. நயீமுல்லாஹ், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.எம்.சிபான் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர். (05)

## தனியாருக்கு நெல்கொள்வனவு அனுமதி: கமக்காரர் அமைப்புக்கள் கடும் விசனம்



நெல் சந்தைப்படுத்தல் சபையை விடுத்து தனியாருக்கு நெல் கொள்வனவு செய்வதற்கு அனுமதிப்பது என்பது தொடர்பான விவசாய அமைச்சரின் கருத்து மனவேதனையளிப்பதாக இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன செயலாளர் முத்து சிவமோகன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

இந்த காலபோக செய்கையில், விளைச்சலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்ட நிலையில் அரசாங்கத்திடம் இழப்பீடு கேட்டு நிற்கின்ற நேரத்தில் அரசாங்கம் நெல்லையும் கொள்வனவு செய்யாது தனியாருக்கு வழங்கினால், தனியார் நினைத்த விலையில் கொள்வனவு செய்வார்கள்.

அத்துடன், தனியார் இன்னும் குறைந்த விலையில் நெல்லை கொள்வனவு செய்வார்கள். இதன் காரணமாக விவசாயிகளே பாதிக்கப்படுவார்கள். - என அவர் மேலும் தெரிவித்தார். (05)

## முஜிபுர் ரஹ்மான் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமை ஒரு சிரிப்பு நாடகம்

### அமைச்சர் டயானா கமகே கிண்டல்

ஒழுக்கமற்ற மக்களை ஒழுக்கமுள்ளவர்களாக மாற்றவே கண்ணீர்ப்புகைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்துள்ளார். சுற்றுலாத் துறை அமைச்சில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

கட்டுக்கடங்காத ஒழுக்கமற்ற மக்களை ஒழுக்கமுள்ளவர்களாக மாற்றவே கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வேண்டுமென்றே நாட்டை முடக்கி, தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தி நாட்டுக்கு பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றார்.

மக்களைத் தூண்டிவிட்டு, இதுபோன்ற பொறுப்பற்ற வேலையைச் செய்வதால், இந்த நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை தடைபடும். கண்ணீர் புகை தாக்குதல் பற்றி அதிகம் பேசும் சஜித் பிரேமதாச, தனது தந்தையின் பாதையை சிந்தித்து செயற்பட வேண்டும்.

அத்தோடு கண்ணீர் புகை தாக்குதலால் நாடாளுமன்ற உறுப்பினர் முஜாபர் ரஹ்மான் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமை சிரிப்பை ஏற்படுத்துகின்றது. சஜித் பிரேமதாஸவும் முஜிபுர் ரஹ்மானும் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பறிக்க பல முயற்சிகளை மேற்கொண்டனர். - இவ்வாறு டயானா கமகே தெரிவித்துள்ளார். (05)

# தேசிய மட்ட சதுரங்க போட்டியில் மட்டு. புனித மைக்கல் சாதனை





(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்வியமைச்சும், அகில இலங்கை பாடசாலைகள் சதுரங்க சம்மேளனமும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட சதுரங்க போட்டியில் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி மாணவர்கள் ஐந்து பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். குருநாகல் மாவட்டத்திலுள்ள நான்கு பாடசாலைகளில் இப் போட்டிகள் இடம்பெற்றன. போட்டிகளில் மூன்று முதலிடங்களும், ஒரு இரண்டாமிடமும், ஒரு மூன்றாமிடமும் கிடைக்கப்பெற்றன.

9 வயது அணித்தலைவர் சா.ஆகூஸ் மன் 6 போட்டிகளில் 5.5 புள்ளிகளையும், 17 வயது அணித்தலைவர் சு.வியாசகன் 5 போட்டிகளில் 4 புள்ளிகளைப் பெற்று போட் சம்பியன் ஆகவும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஜனநாயகத்தின் சாவு மணி

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறித்து நேற்று இரு அரசியல்வாதிகள் மிக முக்கியமான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்கள். அவர்களில் ஒருவர் தமிழர் மற்றொருவர் சிங்களவர். ஒருவர் அரசியலில் இளையவர் மற்றவர் அனுபவம் வாய்ந்த மூத்தவர். ஒருவர் ரணிலின் செயற்பாடுகளை நகைச்சுவைப் பாணியில் விமர்சித்திருக்கிறார். மற்றையவர் நேரடியாகவே கடுமையாக விமர்சித்திருக்கிறார். ஆனால், இருவரும் ஒரே கருத்தைத்தான் சொல்கிறார்கள். அரசுத் தலைவராகதவ்று முன்னர் இருந்த ரணில் இல்லை தற்போது அதிகாரத்தில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்க என்பதுதான் அது.

இயக்குநர் சங்கரின் 'அந்நியன்' திரைப்படத்தில் வரும் அம்பி போன்று மிக நல்லவராக, முற்போக்குக் குணத்தை வெளிப்படுத்துபவராக சிறப்பான பண்பியல்புகளை வெளிப்படுத்துபவராக இருப்பார் ரணில், அதுவே அரசுத் தலைவராக அதிகாரத்தில் அமர்ந்ததுமே அந்நியன் விக்கிரமாக அவதாரம் எடுத்து அம்பிக்கு நேரெதிரான கதாபாத்திரமாகவே மாறிவிடுவார் என்று கூறியிருக்கிறார் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்.

”எதிர்க்கட்சியில் இருந்தபோது ஜனாநாயகம் குறித்துப் பேசினார். தமிழ் மக்களுக்கான தீர்வு, ஊடகச் சுதந்திரம் குறித்தெல்லாம் பேசினார். ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்திய போது குரல் கொடுத்தார். இன்று அவர்தான் நிகழ்நிலைச் சட்டத்தைக் கொண்டுவந்து அனைத்து ஊடகங்களையும் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார்” என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுபோன்றே நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெருமாவும் ரணிலை சகட்டு மேனிக்கு விமர்சித்துள்ளார். மக்களின் இறைமையையும் ஜனநாயகக் கட்டமைப்பையும் முழுமையாக முடக்க ரணில் முயற்சிக்கிறார் என்று அவர் குற்றஞ்சாட்டினார். அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காக ஒருவர் எடுத்துள்ள இறுதிக்கட்ட முயற்சிகள் இவை என்றும் விமர்சித்தார்.

அரசமைப்புப் பேரவையை உருவாக்குவதில் பெரும் பங்காற்றியவர் ரணில். ஆனால் இன்றோ தன்வேலையில் அரசமைப்புப் பேரவை தலையீடு செய்ய முடியாது என்று அறிவித்து பேரவையைக் கட்டுப்படுத்தவதற்கு முனைகின்றார். ஒரு பக்கத்தில் நீதித்துறையுடனும் அவர் மோதும் நிலைமைகள் உள்ளன.

நீதிமன்றத் தீர்ப்புக்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. நீதிமன்றங்களில்தீர்ப்புகள் வழங்கப்பட்டவுடன் நீதிபதிகளை நாடாளுமன்றத்திற்கு அழைத்து வருவதற்கு முயற்சிக்கின்றார்கள்.

தேர்தல் ஆணைக்குழுவிற்கு எதிராக நாடாளுமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை அரச தலைவர் நேரடியாக வெளிப்படையாகவே விமாசிக்கின்றார்.

தற்போது ஊடகங்களை முடக்கும் வகையில் நிகழ்நிலை காப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. உள்ளுராட்சி மன்றங்கள் முடக்கப்பட்டுள்ளன. மாகாண சபைகள் முடக்கப்பட்டுள்ளன. அரசமைப்பு பேரவை, நீதித்துறை, போன்ற சுயாதீனக் கட்டமைப்புக்கள் முடக்கப்படும் நிலைக்கு வந்துள்ளன. இது அனைத்துவிமான மக்களின் இறைமையையும் ஜனநாயகக் கட்டமைப்பையும் முடக்கும் செயல் என்றுள்ளார் அவர்.

அவர்கள் இருவரும் சொல்வதுமே முற்றிலும் உண்மை. பின் கதவால் அரசுத் தலைவர் இருக்கையைப் பிடிக்கும் வரைக்கும்தன்னைதமிழ், முஸ்லிம்மக்களின்ஆதரவாளன் என்று வெளிப்படுத்தி வந்த ரணில் விக்கிரமசிங்க இன்று பெரமுனவின் சிங்கள பௌத்த வாக்குகள் வேண்டும் என்பதற்காக அப்படியே தனது குணத்தையும் போக்கையும் கொள்கைகளையும் மாற்றிக்கொண்டார். அவ்வளவுக்கு சந்தர்ப்பவாத அரசியலைச் செய்யும் அவர், தனது உரைகளில் மட்டும் புதிய இலங்கையை புதிய அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்பவேண்டும் என்றும் போதிக்கிறார்.

அரசியல் என்பது வெறும் சந்தர்ப்பவாத முயற்சி மட்டுமே என்று அதிகாரத்தைத் தக்க வைக்க முயலும் ரணில் பதவியில் தொடர்வாரானால் அது ஜனநாயகத்திற்கு முழுதாகச் சாவு மணி அடிப்பதாகவே அமையும்.

# முதலுக்கே மோசம்



**என். சத்திய மூர்த்தி**

தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக சிவஞானம் சிறீதரன் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொறுப்பேற்ற பிறகு, இனம் சார்ந்த அனைத்துதரப்பினரையும்ஒருங்கிணைந்து செயல்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. தான் அவ்வாறுதான் செயல்படப்போகிறார் என்று, தனது தேர்தலுக்குப்பின்னர் அவரும் பல்வேறு செவ்விகளில் உறுதியளித்தார்.

ஆனால், தற்போது நடப்பது என்ன? முதலுக்கே மோசம் என்ற நிலையில், அனைத்து தமிழ்க் கட்சியினரின் ஒற்றுமை யைவிடுங்கள், சிறீதரன் தலைமைதாங்கும் தமிழ்அரசுகட்சிக்குள்ளேயேஉள்வெட்டுகள் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அதி கமாகும் என்று தோன்றுகிறது.



அதற்குக் காரணம் அவரே. எப்போது தன்னை கட்சித் தலைவராக தேர்ந்தெடுத்தார்களோ, அப்போதே அதே கட்சி அமைப்பினர் தேர்ந்தெடுத்த குகதாசனை செயலாளராக சிறீதரன் ஏற்றுக்கொண்டிருக்கவேண்டும். அது போன்றே தன்னை எதிர்த்து போட்டியிட்ட சுமந்திரன் வகைய-றாவையும் அணைத்துச் சென்றிருக்க வேண்டும்.

அவ்வாறு செய்யாததன் மூலம் தனது அரசியல் அனுபவமின்மையை சிறீதரன் வெளிப்படுத்தி உள்ளார். அவருக்கு ஏராளமான ஆண்டுகள் அடி மட்ட தொண்டர்கள் மற்றும் தமிழ் சமூகத்தின் மனநிலைகளை களப்பணி மூலம் அறிந்துகொண்ட அனுபவம் உண்டு. இல்லை என்று மறுக்க முடியாது. ஆனால் சிறீதரனுக்கு தற்போது தேவை அந்த அடி மட்ட தொண்டர்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் தகைகை மட்டுமல்ல. மாறாக, தமிழ் அரசு போன்ற தொன்மையான அரசியல் அமைப்பில் அனைத்துத் தரப்பினரையும் அணைத்து செல்லும் தலைமை த்துவமும் ஆளுமையும், முக்கியமாக தேவை. அந்த குணாதிசியங்களை அவர் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

தற்போதைய கட்சித் தலைமைப் பொறுப்பு, சிறீதரனுக்கு அதற்கான வாய்ப்பை வழங்கி உள்ளது. ஆங்கிலத்தில் 'ஆன் த ஜாப் டிரெயினிங்' என்பார்களே, அதைப்போல. இதுவே, தலைமைத் துவ தேர்தலில் சுமந்திரன் வெற்றிபெற்றிருந்தால் அவருக்கும் பொருந்தி இருக்கும்.

இருவருமே, கட்சி அரசியலில் தலை மைத்துவ பொறுப்பை எந்த நிலையிலும் இதுவரை வகித்ததில்லை. இருவரில் சுமந்திரன் மட்டும் பெருந் தலைவர் என்று பத்திரிகைகளால் அடைமொழி இட்டு அழைக்கப்படும் சம்மந்தனுடன் கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பயணித்துள்ளார். சிறீ-தரனுக்கு அது போன்ற வாய்ப்பும் கிடைக்கவில்லை.

### உரைகல்

அதற்கு காரணம் சிறீதரன் அல்ல. மாறாக, சம்மந்தன்தான். ஏன், சுமந்திரனைக்கூட தனது எண்ணங்களுக்கான உரைகல்லாக தான் பயன்படுத்தி வந்தார். இல்லை என்று சொல்லாமல், சம்மந்தனின் அண்மை சுமந்திரனுக்கு கட்சியில் ஒரு விலாசத்தை கொடுத்தது என்பது உண்மை.

சுமந்திரனின் முகம் கட்சி மற்றும் அரசாட்சியின் பல்வேறு தரப்பினருக்கும் பரிச்சயமாக அதுவே காரணம். அது போலவே, சர்வதேச சமூகம் மற்றும் புலம்பெயர்ந்தோர் அமைப்புகளும் சுமந்திரனுக்காக தங்களது வாசல் கதவுகளை திறந்தன என்றால், அதற்கும் சம்மந்தனே காரணம். ஆனால், சுமந்திரன் தான் தனது அரசியல் வாரிசு என்று சம்மந்தன் இப்போதும், எப்போதும் கூறியது இல்லை. 'மகனே உனது சமத்து' என்ற அளவிலேயே, அவர் சுமந்திரனை வளர்த்துவிட்டுள்ளார்.

### பல்வேறு அலகுகள்

அரசியல் தலைமைப் பொறுப்பு என்பது பல்வேறு அலகுகளைக் கொண்டது. தமிழர் அரசியல் பரப்பில் அதில் அடிமட்ட தொண்டனும் அடங்குவான். சர்வதேசத்தையும், புலம்பெயர்ந்தோரையும் உள்வாங்கிக் கொள்ளவேண்டும். சம்மந்தனே இந்த விளையாட்டில் முழுவதுமாக வெற்றிபெற்றாரா, என்று கேட்டால் இல்லை என்பதுதான் பதில். அதுதான் உண்மையும்கூட.

சம்மந்தனை பொறுத்தவரையில், அடிமட்ட தொண்டர்களை அவர் மறந்து கனகாலம் ஆகிவிட்டது. ஏன், அந்த லெவலில் அவர் எப்போதாவது, சிறீதரன், மற்றும் மறந்துபட்ட மாவையார் அளவிற்கு அரசியல் செய்தாரா, என்பதே தெரியவில்லை. ஆனால், ஒரு காலகட்டத்தில், அமிர்தலிங்கத்தின் தலைமைத்து-வத்துடன் ஒருமித்து பயணித்தவர் என்ற காரணத்தி ற்காக அவரை கட்சியின் அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொண்டனர்.

அதற்கு அப்பாலும் சென்று, வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ்பாண உள்குத்து அரசியலில், வெளியாளாக கிழக்கில் இருந்து வந்த சம்மந்தன் அனைத்து தரப்பினருக்கும் ஏற்புடையவராக ம ாறினார். அது காலத்தின் கட்டாயம். சம்மந்தனும் காலநேர அரசியல் சூழலுக்கு ஏற்ப, யாழ்பாண உள்குத்து அரசியலுக்குள் நுழையவில்லை.

அதனால்தான். இனப்போர் முடிந்து, கடந்த 2013ஆம் ஆண்டு வட மாகாணசபை தேர்தலில், தமிழ் அரசுக் கட்சி தலைமைத்துவம் நல்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதல்வராகத் தன்னை முன்னிறுத்தி கொள்ளவில்லை. காரணம், கிழக்கில் பிறந்த அவருக்கு வடக்கில் கிடைத்த முந்தைய தேர்தல் தோல்வி அனுபவம்தான்.

### மிதவாதி முகம்

அந்த வகையில், அடிமட்ட தொண்டர்களின் அரவணைப்பு அதிகம் இல்லாமலே சம்மந்தனால் பெருந்தலைவராக தற்போது உயர முடிந்தது என்றால், அதற்குக் காரணம் அவர் விடுதலை புலிகள் இயக்கத்தால் அடையாளம் காட்டப்பட்டமைதான். தங்களது கடும்போக்கு அரசியல் மற்றும் தனியாக ஓர் அரசியல் கட்சி என்றெல்லாம் பல்வேறு முன்னெடுப்புகளை விடுதலை புலிகள் அமைப்பு செய்தாலும், நாடாளுமன்றத்திலும் சரி, சர்வதேச சமூத்தின் முன்னாலும் சரி, அவர்களுக்கும் ஒரு மிதவாத அரசியல் முகம் அல்லது முகமூடி தேவைப்பட்டது.

விடுதலை புலிகள் அமைப்பிற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் சம்மததன் போன்ற ஒரு மிதவாதியின் விலாசமும் தேவைப்பட்டது. இன்னும் சொல்லப்போனால், கூட்டமைப்பில் அன்றைய காலகட்டத்தில், தமிழ் அரசுக் கட்சியைத் தவிர்த்து, பிற அங்கத்துவக் கட்சிகள் எல்லாமே முன்னாள் ஆயுதக் குழுக்கள்தான். கிடைத்த வாய்ப்பை சம்ம ந்தன் நன்றாகவே பயன்படுத்திக் கொண்டார்.

அதிலும் குறிப்பாக, இனப்போர் முடிவடைந்து, விடுதலை புலிகள் அமைப்பு காணாமல் போன காலகட்டத்தில், அவரே தமிழ் சமூகத்தின் ஏகபோக அரசியல் குரலாக உருவெடுத்தார். அதற்கு அறிவார்ந்த நிலைபாடுகளில் நன்றாகவே அவர் தன்னை தயார் செய்து வைத்திருந்தார் என்பதும் உண்மை.

இ.ந்த உண்மையையும் சிறீதரன் மறந்து விடலாகாது. காரணம், அவர் புலம்பெயர்ந்தோர் அரசியல் செய்ய விழைகிறார் என்ற எண்ணமே இங்கு இழையோடுகிறது. அவர்களது கருத்துக்களை உள்வாங்கி அதனை தனது கட்சி அரசியலில் தி ணிக்கிறார் என்ற எண்ணவோட்டமும் இங்கு இருக்கிறது. இல்லையென்றால், அவர் போட்டியின்றே தேர்ந்தெடுக்கப்படும் சூழ்நிலை உருவாகி இருக்கலாம்.

### சுவர் இருந்தால்தான்...

இங்கு, சிறீதரன், ஏன், சுமந்திரன் மற்றும் பிற தரப்பினர் புரிந்து கொள்ளவேண்டிய விடயம் ஒன்று உள்ளது. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்பது பழமொழி. அது போன்றே, அவர்கள் அரசியல் செய்வதற்கும், தலைமைத்துவம் வழங்குவதற்கும், அதில் ஆளுமை செய்வதற்கும்,

(5ஆம் பக்கம் பார்க்க..)

# முதலுக்கே மோசம்...



(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் அரசுக் கட்சியும் மேலதிகமாக தமிழ் அரசியல் பரப்பும் காத்திரமாக இருக்கவேண்டும். ஆனால், இன்றைய நிலைமையோ கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதைதான்.

தமிழர் பிரச்சினைகளையும் தமிழ் அரசியல் தலைமைகளையும் தென்னிலங்கை தீவிரமாக எடுத்துக்கொண்டு, கரிசனையுடன் பேச்சு நடத்த வேண்டுமென்றால், அதற்கு முதலில் தேவையானது தமிழர் சமூக-அரசியல் ஒற்றுமைதான். முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் அரசுக் கட்சி ஆகியவற்றில் இருந்து பிரிந்து சென்ற றெலோ மற்றும்ப்ளொட் ஆசியஇருகட்சிகளும், தேர்தல் அரசியலில் அனாதையாக்கபட்ட சில-பல குழுக்களையும் தலைவர்களையும் வைத்துக்கொண்டு. ஜனநாயக தமிழ் கூட்டணி என்ற பெயரில் களம் இறங்கி சில காலம் ஆகிவிட்டது.

அவர்களது குரலுக்கு செவிமடுத்து, அனைத்து தமிழ் கட்சிகளுடனும் சேர்ந்து அவர்கள் அடுத்தடுத்து முன்னெடுத்த மனித சங்கிலி மற்றும் கடையடைப்பு போராட்டம், சென்ற வருடத்தில் படுதோல்வியில் முடிவடைந்தது. அதிலிருந்து தமிழ் அரசு உள்ளிட்ட அனைத்து தமிழ் அரசியல் தலைமைகளும் புரிந்து கொள்ளவேண்டிய விடயம் ஒன்று உள்ளது

**தமிழர் எழுச்சி**

அதாவது, தமிழர் எழுச்சி என்பது நாவளவில் காலம் கடந்த சில தலைவர்கள் தங்களது கடந்த காலத்தின் அடிப்படையில் எதிர்காலத்தை தொடர்ந்து அணுகுவது அல்ல. அது போன்றே. தங்களை பேட்டிக்கும் தொலைகாட்சி விவாதங்களுக்கும் அழைத்து, கேள்வி எழுப்பும் இரண்டு-மூன்று டஜன் இளம் பத்திரிகையாளர்கள் சார்ந்த விடயமும் அல்ல.

இவர்கள் அனைவருக்கும் அப்பால் ஒரு தமிழ் சமூகம் இருக்கிறது. இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காக இவர்கள் பேசும் தமிழ்த் தேசியம் எதுவும் சாதித்துவிடவில்லை.

அந்த இளைஞர்களின் ஆசைகளுக்கும் அபிலாகைளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும், ஏன், கொள்கை சார்ந்த இலட்சியங்களுக்கும் கூட தற்போதைய தலைமைத் தரப்புகளும் அவர்களின் ஒட்டுண்ணிகளும் எதுவும் செய்துவிடவில்லை. இந்த தலைமுறையினரின் எதிர்பார்ப்புகள் என்ன, என்பதுகூட தற்போதிருக்கும் தலைமைகளுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

ஒற்றையாட்சி, ஒற்றை தலைமை

தற்போது பரந்து வரும் தமிழர் அரசியல் பரப்பில், தமிழ் அரசுக் கட்சியின் முடியாத முடிவுகள் புரியாத புதிராகவே இருக்கின்றன. சீறிதரன்தான் தலைவர், ஆனால், அவர் அதனை பறைசாற்றிக்கொள்ள கட்சியின் தேசிய மாநாடு இன்னமும் நடந்தபாடில்லை. திரிகோணமலையில் தலைவர் மற்றும் பிற பொறுப்பாளர்களின் தேர்வு நடந்து முடிந்த கையோடு மூன்றாம் நாள் நடந்து முடிந்திருக்க வேண்டிய மாநாடு, கடைசி நிமிடத்தில் தள்ளிப்போடப்பட்டது.

இடைப்பட்ட காலத்தில், அனைத்து தமிழ் கட்சிகளையும் அரவணைத்து, ஒருங்கிணைத்து செல்ல வேண்டும் என்ற சிறீதரனின் அழைப்பை றெலோ, ப்ளொட் மற்று;ம் ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற கட்சிகளின் தலைவர்கள் வரவேற்றிருக்கிறார்கள். அல்லது, வரவேற்பது போல் பாவனை செய்துள்ளார்கள். அவர்களை பொறுத்தவரையில், பழைய தமிழ் தேசிய கூட்டமைப்பை புதுப்பிப்பதோடு நின்றுவிடாமல், அதனை ஒரு புதிய அரசியல் கட்சியாக தேர்தல் ஆணையத்திடம் பதிவு செய்யவேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் முன்வைத்துள்ளார்கள்.

அவர்களில் சிலருக்காவது, தமிழ் அரசின் வீடு சின்னம் கூட்டமைப்பின் சின்னமாகவே தொடருவதில் எதிர்ப்பில்லை. ஆனால், அது புதிதாக பதிவு செய்யப்படும் கூட்டமைப்பின் தேர்தல் சின்னமாகவே இருக்க வேண்டும். அதுவும், முன்பு தமிழ் அரசின் அரசியல் முடிவுகளையே ஒட்டுமொத்தகூட்டமைப்பும்ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைமை மாறி, முந்தைய ஒற்றை தலைமை முறை இப்போதாவது மாற்றப்பட வேண்டும் என்றும் எண்ணுகின்றார்கள்.

அவர்களைப் பொறுத்தவரையில், நாட்டின் ஒற்றையாட்சி முறைக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒற்றைத் தலைமை முறைக்கும் கொள்கை ரீதியாகவும் செயல்பாட்டு ரீதியாகவும் எந்தவித வித்தியாசங்களும் இல்லை. கட்சி அரசியலில் தற்போதைய நிலைமை மாறினால் மட்டுமே, நாட்டில் ஒற்றையாட்சி முறையை ஒழிக்கக்கோரும் தார்மீக உரிமை தமிழ் அரசியல் பரப்பிற்கு கிடைக்கும்.

இந்த பின்னணியில்தான், தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு அப்பாலும் சென்று விடுதலை புலிகள் அமைப்பால் காணாமல் ஆக்கபட்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியை மீண்டும் உயிர் பெறவைப்பது அவசியமாகிறது. காரணம், கூட்டமைப்பை உயிர்ப்பித்தாலும், பழைய உறுப்புக் கட்சிகளின் நிபந்தனைகளுக்கு தமிழ் அரசின் அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொண்டாலும், அப்போதும். அந்தவளையத்தின் வெளியே, கஜேந்திர குமார் பொன்னம்பலம் போன்ற தலைவர்கள் விடப்பட்டிருப்பார்கள்.

அவர்களையும் உள்வாங்கிக்கொள்ள வேண்டும். அதற்கு பழைய விடுதலை முன்னணியே சரியான அமைப்பாக இருக்கும். அவ்வாறு இல்லை என்றால், காலம் கடந்தாவது அனைவரும் பங்குபெறும் புதிய ஓர் அமைப்பை, புதிய ஒரு சின்னத்தின் கீழ், ஒரு கூட்டு தலைமையின் கீழ் அமைத்து, ஒன்றாகத் தேர்தல் அரசியலை சந்திக்க வேண்டும். ஆனால், அதற்கான முஸ்தீபுகளை யார் எடுத்தாலும், தனி நபர்களுக்கான தலைமைத்துவ பொறுப்புகளை மனதில் கொண்டே புதிய கட்சியின் சட்டதிட்டங்கள் எழுதப்படும் எனலாம். இதில் எங்கே, தமிழரின் இனப்பிரச்சினைக்கு விடிவு பிறக்கும்?

இந்த பின்னணியில், சிறீதரனின் தமிழ் அரசு கட்சியினுள்ளும் நிகழும் முன்னெடுப்புகள், முதலுக்கே மோசம் என்ற நிலைமையிலேயே இதுவரை இருந்து வருகிறது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehppes Tin - 250/=
Coca Cola Tin - 250/=




# இயற்கையோடு இயைந்த வாழ்க்கை



இயற்கை மனிதனுக்கு வாழ்வளிக்கிறது. வாழ்க்கையினைக் கற்றுக்கொடுக்கிறது. இயற்கையில்லையென்றால் மண்ணில் ஈ·ரமில்லை&. விளைச்சலில்லை& மகசூலில்லை&. மனித வாழ்க்கை இல்லை. ஏன் உயிரினங்களில்லை உயிரினங்கள் ஒன்றையொன்று சார்ந்து வாழும் வாய்ப்பை வழங்கி வருவது இயற்கை.

இதனை மிகத் தெளிவாய் உணர்ந்ததால்தான் பழங்காலத்து மக்கள் தங்களின் வாழ்வை இயற்கையோடு இணைத்தே வாழ்ந்தார்கள். அவர்களின் வாழ்வு இயற்கையோடு இரண்டறக் கலந்திருந்தது. இயற்கையைஅவர்கள்நேசித்தார்கள். இயற்கையைக் காத்தார்கள். அப்போதெல்லாம் மாதம் மும்மாரி மழை பொழிந்தது அதற்கு சாட்சிகளாய் பழந்தமிழ் நூல்கள் இன்றும் உள்ளன. இதை அவ்வக்காலத்து எழுந்த இலக்கியங்கள் நமக்கு புலப்படுத்துகின்றன. வைகையில் ஓடிவந்த வெள்ளத்தைப் பரிபாடலும், காவேரியின் எழில் அழகை பட்டினப்பாலையும் நமக்கு இன்றும் உணர்த்தும் சாட்சிகளால் உள்ளன. மனிதர்களின் வாழ்வில் இயற்கைப் பற்றுக் குறையும்போது இலக்கியங்களில் இயற்கைப் புனைவுகளும் குறைந்து விடுகின்றன. இதை சங்க இலக்கியங்களிலும் அவற்றிற்குப் பின்வந்த இலக்கியங்களிலும் இயற்கை புனைவு நிலையில் உள்ள வேறுபாடு நமக்கு உணர்த்துகின்றன.

மனிதன் அல்லாத பிற அனைத்தும் இயற்கை மலையும், மடுவும் இயற்கை மின்னும். மழையும் இயற்கை, முகிலும் இடியும் இயற்கை, காற்றும் கடலும் இயற்கை, புள்ளும் விலங்கும் இயற்கை, மரமும் செடியும் இயற்கை. இவைபோல இறைவன் படைத்த பலவும் இயற்கை.

இயற்கையின் நகல் கலை. அது இயற்கையைப் பிரதி பலிக்கும் கண்ணாடி. இயற்கையால் கலையும் கலையால் இயற்கையும் செவ்விப் பெறுகின்றன. இயற்கை கட்டுப்பட்டதோ சலனமற்றதோ அல்ல: இயற்கை தனி ஆற்றல் உடையது. காலச் சுழற்சியில் அதன் ஆற்றல் பொலிகிறது. வளமும் வளர்ச்சியும் ஆற்றலும் மிக்க இவ்வியற்கையின் உயிர்த் துடிப்பால் அதன் வடிவமும் வண்ணமும் மாறிக்கொண்டே இருக்கின்றன. இதனால் இவ்வியற்கையை, வாழ்க்கையைப் போன்று வடிவற்றது என்றும் கூறுவார்கள் காலை முதல் இரவு வரை, இரவு முதல் விடியல் வரை அலரும் மலர்களும், உதிரும் இலைகளும், ஒளிரும் ஆதவனும் பொழியும் நிலவும் எனக் காட்சி மாறுகிறது. மணிக்கு ஆயிரம் கவினுறு காட்சிகளை வழங்கும் இயற்கைக் கன்னி என்றும் முதிர்வதில்லை.

மனிதன் தன் உடல் இயக்கத்தில் இருந்தே ஏராளமான பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். ஒழுங்குமுறை, சலிப்பின்மை, எல்லாத் தடைகளையும் மீறி சிறப்பாகச் செயல்படுதல் போன்றவை அந்தப் பாடங்களில்

## பாடல் எண் : 1
## பண் : நட்டபாடை




தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானிவனன்றே.

**பொழிப்புரை:**

தோடணிந்த திருச்செவியை உடைய உமையம்மையை இடப்பாகத்தே உடையவனாய், விடை மீது ஏறி, ஒப்பற்ற தூய வெண்மையான பிறையை முடிமிசைச்சூடி, சுடுகாட்டில் விளைந்த சாம்பற் பொடியை உடல் முழுதும் பூசி வந்து என் உள்ளத்தைக் கவர்ந்தகள்வன், இதழ்களை உடைய தாமரை மலரில் விளங்கும் நான்முகன், படைத்தல் தொழில் வேண்டி முன்னை நாளில் வழிபட அவனுக்கு அருள்புரிந்த பெருமை மிக்க பிரமபுரத்தில் எழுந்தருளியுள்ள பெருமானாகிய இவன் அல்லனோ!

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## ஜனாதிபதியின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலக பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சென்றிருந்தனர். அங்கு வர்த்தகச் சமூகத்தையும் சந்தித்தனர். இலங்கையை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பிலான தீர்க்கமான பேச்சுக்களை முன்னெடுத்திருந்தனர். இலங்கைக்கு முதலீட்டாளர்களை அழைத்து வருவது தொடர்பிலான பேச்சுக்களையும் முன்னெடுத்திருந்தனர்.

அதேபோல் உகண்டாவின் கம்பாலா நகரில் நடைபெற்ற அணிசேரா மாநாட்டில் உலகின் செல்வந்தநாடுகளுடன்செயலாற்றும் விதம் குறித்து ஜனாதிபதி தெளிவுபடுத்தினார். 2050 உலக பொருளாதாரத்திற்கு ஏற்றவகையில் இலங்கை பொருளாதாரத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் குறித்தும் கலந்துரையாடியிருந்தார்.

பின்னர் ஜி-77 மற்றும் சீன தென்துருவ மாநாட்டில் பங்கேற்றிருந்தஜனாதிபதிகாலநிலை அனர்த்தங்கள்மற்றும்தொற்றுநோய் நிலைமைகளுக்கு எவ்வாறு முகம்கொடுக்கலாம் என்பது தொடர்பில் கலந்துரையாடினார். அந்த நிலைமை எம்மை போன்ற நாடுகளை பாதிக்கும் விதம் மற்றும் அந்த நேரத்தில் பொருளாதாரத்தை செயற்படுத்த வேண்டிய முறைமை தொடர்பிலும் கலந்தாலோசித்தார். பசுமை பொருளாதாரத்திற்கான மாற்றம் தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்கள் தொடர்பில் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் ஆதாரமற்றவையாகும். இவ்வாறான சர்வதேசமாநாடுகளில்பங்கேற்பதால் எமக்கும் உலக நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை பலப்படுத்திக்கொள்வதோடு, புதிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் முடியும். அரசியல் தலைவர்கள் தனியார் துறையினருடன் கலந்துரையாடி வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடன் இணைந்து அபிவிருத்திச் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கான இயலுமையும் அதனால் கிடைக்கும்.

அதேபோல் அணிசேரா கொள்கையை மேலும் உறுதிபடுத்துவதாகவும் அந்த சுற்றுப்பயணம் அமைந்திருந்தது. உக்ரேன் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் மோதல்கள் ஆசியாவின்மீதுதாக்கம்செலுத்தாமல் இருப்பதற்கான முன்னெடுப்புக்கள் தொடர்பிலும் பேசப்பட்டதோடு, அரச தலைவர்களுடனான பேச்சுக்களின் பின்னர் உலகின் அமைதியை பேண முடியும்.

அதேபோல்பொருளாதாரமற்றும் சமூகநீதியில்முன்னெடுக்கவேண்டிய செயற்பாடுகள் தொடர்பிலும் மேலும் கலந்துரையாடப்பட்டதோடு, இலங்கைக்கு வருகை தருமாறு மற்றைய நாட்டுத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது என்றார்.

## சிஐடியிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் சார்பில் நீதிமன்றில் முற்பட்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரியாகம விடுத்த கோரிக்கையை கருத்திற்கொண்டே நீதிவான் மேற்கண்ட உத்தரவை பிறப்பித்தார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று (நேற்று முன்தினம்) ஆஜராகுமாறு அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவர் அங்கு வருகை தராமைக்கு முன்வைத்த காரணம் பொய்யானது என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரியாகம நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற அரச செலவு முகாமைத்துவ அமைச்சு உபகுழுக் கூட்டத்தில் அமைச்சர் நேற்றைய தினம் கலந்துகொள்ளவில்லையென அதன் செயலாளர் எழுத்து மூலம் அறிவித்துள்ளார் என்று அவர் நீதிமன்றில் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி 9ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# குப்பைத் தொட்டியில் போட வேண்டியவர்களை கட்சி முன்னிலையில் அமரவைப்பதை ஏற்கேன்

## சரத் பொன்சேகா காட்டம்



தயா ரத்நாயக்க இராணுவ அதிகாரி என்பதால் அவரை கட்சியில் இணைத்துக் கொள்வதாக இருந்தால் கோட்டாபய ராஜபக்சவையும் கட்சியில் இணைத்துக் கொள்ள முடியும்.பொருளாதார நிபுணர் என்று குறிப்பிட்டுக் கொண்டு அஜித் நிவார்ட் கப்ராலையும் கட்சியில் இணைத்துக் கொள்ளமுடியும். குப்பைத் தொட்டியில் போட வேண்டியவர்களை கட்சியின் முன்னிலையில் அமர வைப்பதை நான் ஏற்றுக்கொள்ள போவதில்லை என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதுமேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கத்தில் முக்கிய உயர் பதவிகளை வகித்த தயா ரத்நாயக்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் உயர் பதவி வழுங்கப்பட்டுள்ளதை சமூக வலைத்தளங்கள் ஊடாக அறிந்துகொண்டேன். ராஜபக்சர்களின் செயற்பாடுகள் மற்றும் அவர்களின் நிர்வாகத்தை முழுமையாக புறக்கணிக்கும் இராணுவ அதிகாரிகள் மற்றும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் என்னை தனிப்பட்ட முறையில் சந்தித்து இவ்விடயம் தொடர்பில் பேசினார்கள். இதை அவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியில் புதிதாக இணைந்துக் கொண்டவர்கள் குறிப்பிட்ட கருத்துக்கள் தொடர்பில் ஹர் டி சில்வா, எரான் விக்கிரமரத்ன மற்றும் கபீர் ஹாசீம் ஆகியோர் அதிருப்தியடைந்திருந்தார்கள். இவ்வாறான முரண்பாடுகள் கட்சியின் ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல,கொள்கைக்கு முரணாக செயற்பட்டால் சிறந்த இலக்கை அடைய முடியாமல் போகும் நிலை ஏற்படும்.

தயா ரத்நாயக்க தொடர்பில் நான் குறிப்பிட்ட விடயங்களை நாட்டு மக்களும், இராணுவ அதிகாரிகளும் நன்கு அறிவார்கள். வருபவர்கள்எல்லோரையும் கட்சியில் இணைத்துக் கொள்ளும் போது அவர்களின் கடந்த காலத்தைப் பற்றி ஆராய வேண்டும்.

தயா ரத்நாயக்க இராணுவ அதிகாரி என்பதால்அவரை கட்சியில்இணைத்துக் கொள்வதாக இருந்தால் கோட்டபய ராஜபக்சவையும் கட்சியில் இணைத்துக் கொள்ள முடியும்.இவ்வாறானநிலைநீடித்தால் பொருளாதார நிபுணர் என்று குறிப்பிட்டுக் கொண்டு அஜித் நிவார்ட் கப்ராலையும் கட்சியில் இணைத்துக் கொள்ள முடியும்.

கோட்டபய ராஜபக்ச அரசாங்கத்தில் இருந்தவர்கள் அனைவரையும் கட்சியில் இணைத்துக் கொண்டு அவர்களுக்கு பதவிகளை வழங்கி,அடுத்த தேர்தலில் வெற்றிபெறலாம் என்று நினைப்பது பிரச்சினைக்குரியது. மக்கள் இந்த மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை.குப்பைத் தொட்டியில் போட வேண்டியவர்களை கட்சியின் முன்னிலையில் அமர வைப்பதை நான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.கடந்த அரசாங்கத்தில் இருந்தவர்களை திருடர்கள் என்று விமர்சித்து விட்டு, அவர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட முயற்சிப்பது பிரச்சினைக்குரியது. - என்றார். (05)

# இந்திய, சீன நிறுவனங்களுக்கு ரெலிகொம் பங்குகள் விற்பனை

## நிதி அமைச்சரு அறிவிப்பு

ரெலிகொம் நிறுவனத்தின் 53.23 சதவீத பங்குகளை போட்டித்தன்மையான இந்தியாவின் ஜியோ பிளாட்போர்ம் நிறுவனம், சீனாவின் கொட்யுன் இன்டர்நெனல் இன்வெஷ்ட்மன்ட் ஹோல்டிங் நிறுவனத்துக்கு விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிதிமற்றும்பொருளாதாரஸ்திரப்படுத்தல்அமைச்சு வெளியிட்டுள்ளஅறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

ரெலிகொம் நிறுவனத்தின் அரசுக்கு சொந்தமான பங்குகளில் 50.23 சதவீதமான பங்குகளை விற்பனை செய்யும் இறுதி தீர்மானத்தில் சீன மற்றும் இந்திய நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியில் தீர்மானித்துள்ளது. இதற்கமைய அமைச்சு மட்டத்தில் துறைசார் குழுக்கள் நியமிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ரெலிகொம் நிறுவனத்தின் பெரும்பாலான பங்குகளை பெற்றுக்கொள்வதற்கு இந்தியாவின் ஜியோ பிளாட்போர்ம் நிறுவனம், சீனாவின் கொட்யுன் இன்டர்நெனல் இன்வெஷ்ட்மன்ட் ஹோல்டிங் நிறுவனம், ஐக்கிய இராச்சியத்தின் லய்கா கூட்டிணைவுக்கு சொந்தமான பெட்டிகோ கொமர்ஷியோ இன்டர்னெனல் நிறுவனம் என்பன முன்னிலையாகியிருந்தன.

இதற்கமைய நிதி அமைச்சின் செயற்திட்ட விசேட குழு மற்றும் அமைச்சரவை நியமித்த விசேட குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய ரெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை பெற்றுக்கொள்வற்கு பூரண தகுதி உள்ள போட்டித்தன்மையான நிறுவனங்களாக ஜியோ பிளாட்போர்ம் நிறுவம் மற்றும் சீனாவின் கொட்யூன் ஹோல்டிங் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஜியோ பிளாட்போர்ம் நிறுவனம் இந்தியாவின் கோடிஸ்வர வர்த்தகரும்,முதனிலை தொழிலதிபருமான முகேஸ் அம்பானிக்கு சொந்தமானது. போஃபஸ்வர்த்தகவலைத்தளத்தின்தரப்படுத்தலுக்கு அமைய உலகில் செல்வந்தர்களின் பட்டியலில் முகேஸ் அம்பானி 11 ஆவது இடத்தில் உள்ளார். (05)

# கடத்த இருந்த ஏலக்காய் தமிழ் நாட்டில் சிக்கியது

இந்தியாவின் தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் குந்துகால் கடற்கரையில் இருந்து இலங்கைக்கு படகில் கடத்த முயன்ற இந்திய மதிப்பில் ஒரு லட்சத்து 45 ஆயிரம் ரூபா மதிப்பிலான ஏலக்காயை மண்டபம் மரைன் பொலிஸார் பறிமுதல் செய்து தப்பியோடிய மூவரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

திங்கட்கிழமை நள்ளிரவு மன்னார் வளைகுடா கடல் வழியாக படகில் ஏலக்காய் இலங்கைக்கு கடத்தப்பட இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் குந்துகால் மீன்பிடி துறைமுக பகுதியில் மண்டபம் மரைன் பொலிஸார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது குந்துகால் மீன்பிடி துறைமுகம் பகுதியில் மரைன் பொலிஸாரை கண்டதும் 3 நபர்கள் மூடை ஒன்றை விட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதனால் சந்தேகமடைந்த மரைன் பொலிஸார் அந்த மூடையை சோதனை செய்தபோது அதில் 43 கிலோ ஏலக்காய் மறைத்து வைத்திருப்பதைக் கண்டு பிடித்தனர்.

இதையடுத்துஏலக்காய்மூடையை கைப்பற்றிய மரைன் பொலிஸார் ஏலக்காய் மூடையை இலங்கைக்கு கடத்த முயன்ற மர்ம கும்பல் குறித்து தீவிரவிசாரணைநடத்திவருகின்றனர்.

மேலும் கைப்பறறபட்ட ஏலக்காய் மூடை ராமேஸ்வரம் சுங்கத்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட ஏலக்காய் இந்திய மதிப்பில் ஒரு லட்சத்து 45 ஆயிரம் ரூபா இருக்கும் எனவும் இந்த மரைன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குந்துகால் கடற்கரை இலங்கைக்கு கடத்தல் பொருள்கள் கடத்தும் முக்கிய கேந்திரமாக மாறியுள்ளமை பாதுகாப்பு வட்டார அதிகாரிகள் இடையே கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. (05)

# தெமட்டகொடை ருவன் சமிலவின் மனைவி, மகன், சகோதரி கைது

போதைப்பொருள் கடத்தல்காரரான ருவன் சமில பிரசன்ன என்றழைக்கப்படும் தெமட்டகொடை ருவன் என்பவரின் மனைவி, மகன் மற்றும் சகோதரியை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர். போதைப்பொருள் கடத்தல், விற்பனை மற் றும் பிற சட்டவிரோத வழிகளில் பெறப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 100 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்கள் இவர்களின் பெயர்களில் இருக்கின்றமை விசாரணைகளில் தெரிய வந்ததையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

தரிந்து மதுசங்க என அடையாளம் காணப்பட்ட தெமட்டகொட ருவனின் 27 வயது மகன், முன்னணி அரசியல் கட்சி ஒன்றின் குப்பியாவத்தை தொகுதி அமைப்பாளர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நேற்று (வியாழக்கிழமை) அளுத்கடை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். (05)

# 13 வயது சிறுமி துஷ்பிரயோகம் குற்றச்சாட்டில் தந்தை கைது



*நொச்சியாகம பிரதேசத்தில் 13 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 34 வயதுடையவராவார்.*

*பாதிக்கப்பட்ட சிறுமி தனியாக நொச்சியாகம பொலிஸ் நிலையத்துக்கு சென்று தந்தை தொடர்பில் முறைப்பாடு வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*குறித்த சிறுமி கடந்த 2021ஆம் ஆண்டிலிருந்து தனது தந்தையால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகி வருவதாக முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.*

*அப்போது அவர் பாடசாலையில் 6ஆம் வகுப்பில் கல்வி கற்று வந்தார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதனையடுத்தே விசாரணைகளை மேற்கொண்ட நொச்சியாகம பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர். (05)*

# புதிய மாணவர்கள் வரவேற்கும் நிகழ்வு





(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனை சபா ஆரம்ப பாடசாலையின் பிரியாவிடை மற்றும் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வுகள் அதிபர் மர்லியா பர்ாத் தலைமையில் பாடசாலையில் நேற்று(வியாழக்கிழமை) இடம்பெற்றது.

இங்கு மாணவர்களின் கலை; கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றதுடன், பாடசாலையின் புதிய மாணவர்களின் வரவேற்பும் முதலாம் ஆண்டுக்குச் செல்லும் மாணவர்களை வழி அனுப்பும் நிகழ்வும் மாணவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# பல்கலைக்கழகங்களில் பொங்கல் பெருவிழா













(வி.ரி.சகாதேவராஜா)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில்மருத்துவபீட மாணவர்கள்குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் தைப்பொங்கல் தின விழாவை நடத்தினர்.

இந்த நிகழ்வில் இன, மத பேதங்கடந்து பல மாணவர்கள்பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தைப்பொங்கல் தின விழா கோலாகலமாக நடைபெற்றது. (05)

# இரண்டு பிரதேச செயலகங்களுக்கான ஒருங்கிணைப்புகுழுக் கூட்டம் நடந்தது



மண்முனை மேற்கு வவுணதீவு மற்றும் மண்முனைப்பற்று ஆரையம்பதி போன்ற பிரதேச செயலக பிரிவுகளுக்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் சிவ.சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விரு பிரதேச செயலக பிரிவுகளுக்குமான 2024 ஆம் ஆண்டிற்கான முதலாவது பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டமாக இந்தக்கூட்டங்கள் அமையபெற்றுள்ளன.

மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலக பிரிவில் பிரதேச செயலாளர் திருமதிசத்தியானந்தியின் ஏற்பாட்டிலும், மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் திருமதி தெட்ணகௌரி ஏற்பாட்டிலும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் தலைமையிலும் இந்தக் கூட்டங்கள் இடம்பெற்றன. குறிப்பாக இப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பபிலும், இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

விசேடமாக காணி பிரச்சினைகள் தொடர்பாகவும் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் வீதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

மேலும்இப்பிரதேசத்தின்விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், சுற்றாடல்உட்படஏனையஅனைத்து திணைக்களங்கள் சார் விடயங்கள் தொடர்பிலும் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும்மக்கள்நலன்சார்திட்டங்கள்பலவற்றிற்கும் ஒருங்கிணைப்பு குழு தலைவரால் அனுமதியளிக்கப்பட்டது.

இந்தக் கூட்டங்களின்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரன், தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் தற்போதைய கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளருமான பூபாலபிள்ளை பிரசாந்தன், மாவட்ட ஒருங்கிணைப்புகுழு தலைவரின் தனிப்பட்ட செயலாளர் தம்பிராஜா தஜிவரன் போன்றோர் உட்பட துறைசார் அதிகாரிகள், உத்தியோகஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# தென் கிழக்குப் பல்கலைக்கழக 16ஆவது பொதுப் பட்டமளிப்பு

(பாறுக் ஷிஹான்)

தென்கிழக்குப்பல்கலைக்கழகத்தின் 16 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா, பல்கலைக்கழக ஒலுவில் வளாக மாநாட்டு மண்டபத்தில் பெப்ரவரி மாதம் 10 ஆம் திககதி சனிக்கிழமை, 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு நாள்களும் நடைபெறவுள்ளதாக, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் தெரிவித்துள்ளார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக வேந்தர்ஜனாதிபதிசட்டத்தரணிபாயிஸ் முஸ்தபா தலைமையில் இரண்டு நாள்களும் தலா 3 அமர்வுகளாக மொத்தமாக ஆறு அமர்வுகளாக இந்த பட்டமளிப்பு நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முதலாவது நாளின் முதலாவது அமர்வில் கலை கலாசார பீடத்தினைச் சேர்ந்த 342 மாணவர்களும், இரண்டாவது அமர்வில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடங்களைச் சேர்ந்த 355 மாணவர்களும் ,மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றைச்சேர்ந்த 430 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இரண்டாம்நாள்ஞாயிற்றுக்கிழமை நான்காவது அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தைச் சேர்ந்த 314 பட்டதாரிகளும், ஐந்தாவது அமர்வில் கலை கலாசார பீடங்களைச் சேர்ந்த வெளிவாரி பட்டதாரிகள் 350 பேருக்கு பட்டங்கள்வழங்கப்படவுள்ளனஎனவும் தெரிவித்தார். மேலும் ஆறாவது அமர்வில் கலை கலாசார மற்றும் முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்த வெளிவாரி பட்டதாரிகள் 361 பேருக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன எனவும் 1414 உள்வாரிபட்டதாரிகளும், 711 வெளிவாரி பட்டதாரிகளுக்குமாக மொத்தம் 2152 பட்டதாரிகளுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# பாதுகாப்பான புலம்பெயர்வு திருமலையில் விழிப்புணர்வு

(ஹஸ்பர் ஏ.எச்)

மனிதவள திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகம் மற்றும் திருகோணமலை நகரசபையின் பொது நூலகத்துடன் இணைந்து இளைஞர்களுக்கான பாதுகாப்பான புலம் பெயர்வு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு சர்வதேச புலம் பெயர்தலுக்கான அமைப்பின் மூலம் புதன்கிழமை திருகோணமலை நகரசபை பொது நூலக மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வு திருகோணமலை நகரசபையின் செயலாளர் வெ. இராஜசேகர் தலைமையில் நடைபெற்றது. பட்டணமும் சூழலும் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகஸ்தர் தெ. புரபானந்தன் நிகழ்வை மேற்கொண்டிருந்தார்.

நிகழ்வில் திருகோணமலை நகரசபையின் நிர்வாக உத்தியோகத்தர் என் . பரமேஸ்வரன் , பிரதம நூலகர் நா . யோகேஸ்வரன் நூலகர் றிம்சானா , நூலக உதவியாளர்களான உ . ரஜனிக்காந்தன் , அ . அச்சுதன் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# அம்பாறையில் சிறப்பாக செயற்பட்ட பிரதேச செயலகங்களுக்கு கௌரவம்



(நூருல் ஹுதா உமர்)

ஸ்ரீலங்கா இஸ்லாமிக் ரிலீப் நிறுவனம், அம்பாறை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பிரதேச செயலகங்களில் இலங்கையில் நிலையான வாழ்வாதாரத்தின் மூலம் விதவைகள் மற்றும் பெண்களை வழிநடத்தும் குடும்பத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டம் மூன்று வருடங்களாக வெற்றிகரமான முறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கையில் நிலையான வாழ்வாதாரத்தின் மூலம் விதவைகள் மற்றும் பெண்களை வழிநடத்தும் குடும்பத்தை மேம்படுத்துவதனூடாக பொருளாதார ரீதியாக நலிவுற்ற பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களை வலுப்படுத்துவதே இச்தத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தினூடாக வாழ்வாதார உதவிகள், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது அவரச உலர் உணவு பொதிகள், அனர்த்த நிவாரனம், மாணவர்களுக்கான கற்றல், சுயதொழில் பயிற்சி மற்றும் வழிகாட்டல்கள் என பல செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தவகையில், இவ்வேலைத்திட்டத்தின் அரச பங்குதாரர்களுக்கான கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீளாய்வு செயலமர்வும் இத்திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்திய பிரதேச செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கௌரவிப்பும் 2024 ஜனவரி 23 ஆம் திகதி அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தகஅபேவிக்ரமவின்தலைமையில்இடம்பெற்றது. இதன்போது இத்திட்டம் அமுல்படுத்தப்பட்ட இறக்காமம், சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, நாவிதன்வெளி, வெல்லாவெளி, களுவாஞ்சிகுடி மற்றும் பதியத்தலாவ ஆகிய 07 பிரதேச செயலக பிரதேச செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களே கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், இலங்கை இஸ்லாமிய நிறுவனத்தின் ஏற்பாட்டில் நிதி ஒருங்கிணைப்பாளர் அஹமட் இர்ாத், சிரேஷ்ட திட்ட உத்தியோகத்தர் ஏ.சுபுஹான், சிரேஷ்ட நிதி உத்தியோகத்தர் ஏ.பி.அர்சாத், திட்ட இணைப்பாளர்களான சி. சுகிர்தனி, சசி குமார் கனேமூர்த்தி, ரமேஷ், ஹுதா ஆகியோரும் கலந்து சிறப்பித்ததுடன் வாழ்வாதாரத் திட்டத்தை வெற்றிகரமாக முடிக்க கடுமையாக உழைத்த இஸ்லாமியக் ரிலீப் நிறுவன குழுவினரும் மாவட்ட செயலாளரால் கௌரவிக்கப்பட்டனர். (05)

# இளங்கவி விபுல சசிக்கு கலைஞர் சுவதம் விருது

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட இலக்கிய விழாவில் காரைதீவைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர் இளம் கவிஞர் மனோகரன் சசிப்பிரியன்(விபுலசசி) அவர்களுக்கு கலைஞர் சுவதம் விருதை அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரம வழங்கிக் கௌரவித்தார். (05)

# ஏறாவூர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் வித்தியாலயத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவும் சாதனையாளர் கௌரவிப்பும்;



(உமர் அறபாத் -ஏறாவூர் )

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட ஏறாவூர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் வித்தியாலயத்தின் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட 10 ஆண்டு நிறைவை முன்னிட்டும் 2023 ஆம் ஆண்டு மெய்வல்லுநர் போட்டியில் வெற்றிகளை பெற்ற மாணவர்களையும்

2023 ஆண்டு 5 ஆம் தர புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் பிரதேச கலாசார போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வுகடந்தபுதன்;கிழமைபாடசாலை பிரதானமண்டபத்தில்அதிபர்ஜலால்தீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக பாடசாலை ஸ்தாபகர் முன்னாள் அமைச்சர் அல்ஹாஜ் பசீர் சேகுதாவூத் கலந்து சிறப்பித்ததுடன் கௌரவ அதிதியாக மட்டக்களப்பு வலயக்கல்விப் பனிமனையின் பணிப்பாளர் அமீர் கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் மற்றும் மாணவர்களின் வெற்றிகளுக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களும் இதன்போது பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பெற்றோர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நிகழ்வை அலங்கரித்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# நன்னடத்தை பாடசாலை சிறுவன் மர்மச் சாவு மேற்பார்வையாளருக்கு 14 நாள்கள் மறியல்

(பாறுக் ஷிஹான்)

நன்னடத்தை பாடசாலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் கைதான அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணை 14 நாள்கள் விளக்கமறியலில்வைக்குமாறும்அது தொடர்பான வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதிவரை மறுவிசாரணைக்காக ஒத்திவைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையகப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம்தொடர்பில்அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண் சந்தேகத்தில் கல்முனை தலைமையக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் புதன்கிழமை மீண்டும் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணி ஆகியோரின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு 28 வயதுடைய குறித்த பாடசாலையின் மேற்பார்வையாளரான பிறின்ஸி புலேந்திரன் என்பவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (05)

# முல்லை. பிரதான வீதியருகே சட்டவிரோத மண் அகழ்வு

*கண்டாவளையில் பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதியை அண்மித்து சட்டவிரோத மணலகழ்வு தொடர்பில் கண்டாவளை பிரதேச செயலாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டார்.*

*குறித்த பகுதியில் மணல் மாபியாக்களால் கனரக வாகனம் கொண்டு அச்சம் இல்லாது சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றமை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது.*

*குறித்த விடயம் தொடர்பில் 3 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளை அழைத்து அமைச்சர் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தார்.*

*இந்த நிலையில், குறித்த பகுதிக்கு புதன்கிழமை பிற்பகல் சென்ற கண்டாவளை பிரதேச செயலாளர் களநிலைமைகளைக் கண்காணித்ததுடன், சம்பவம் தொடர்பில் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை கிராம சேவையாளர் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ள உள்ளதாகத் தெரிவித்தார்.*

*சட்ட விரோத மணல் அகழ்வுக்கு 10 நாள்களுக்குள் நிரந்தர தீர்வை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெற்று தருவதாக கூறியுள்ள நிலையில், தற்பொழுது இந்த பகுதியில் மேற்கொள்ளப்படும் சட்ட விரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.*

*குறித்த பகுதி இரணைமடு குளத்தின் கழிவுநீர் வாய்க்கால் மற்றும் பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதியை மிக அண்மித்து காணப்படுவதால், எதிர்காலத்தில் மிகப்பெரிய அனர்த்தங்களையும், பாதிப்புக்களையும் ஏற்படுத்தும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. (05,113)*

# கல்முனை ஆதார வைத்தியசாலையில் உலகத் தொழுநோய் தின நிகழ்வுகள்








(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையில் தொழுநோய் தினத்தினையொட்டி செவ்வாய்க்கிழமை வைத்தியசாலையின் கேட்போர்கூடத்தில் தொழுநோய் தின நிகழ்வு நடைபெற்றது.

வைத்தியசாலையின் தோல் நோய் பிரிவினரின் ஏற்பாட்டில் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர். இரா. முரளீஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது

இந் நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தோல் வைத் திய நிபுணர் டாக்டர்.என். தமிழ்வண்ணன் கலந்து சிறப்பித்தார்.

வரவேற்புரையை தோல் நோய் மருத்துவர் டாக்டர் ஜே.எச்.. மாகிட் வழங்கியதோடு விசேட உரையைவைத்தியசாலையின்பணிப்பாளர்வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன் வழங்கியிருந்தார்.

தோல் வைத்திய நிபுணர் டாக்டர் என். தமிழ்வண்ணனால் தொழுநோய் பற்றிய விழிப்புணர்வு விளக்கவுரை நிகழ்த்தப்பட்டது.

அவர் தனதுரையில் தொழுநோயின் வரலாறு, அதன் வகைகள், அறிகுறிகள் முக்கியமாக தொடுகையுணர்வு குறைவான தோலின் நிறமாற்றங்கள், நரம்புத்திரள்கள், ஏனைய தோலின் மாற்றங்கள் இதற்கு சிகிச்சை முறைகள் மருந்துகள் மற்றும் அதன் பக்க விளைவுகள் அதற்கான தீர்வுகள் பற்றி விளக்கமாக விவரித்தார்.

இதனைத் தொடர்ந்து வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள், உத்தியோகத்தர்கள்ஊழியர்களால்டாக்டர்தமிழ்வண்ணனுக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னமும் வழங்கப்பட்டு கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

நன்றியுரையை தோல் சிகிச்சை பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி வி. இராஜலோஜினி நிகழ்த்தினார்.

நிகழ்வில் வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் டாக்டர் எம். என்.எம். சுவைப், வெளிநோயாளர் பிரிவு பொறுப்பு வைத்தியர் டாக்டர் ஆர்.கணேஷ்வரன், தாதிய பரிபாலகர் என்.சசிதரன், தாதிய பரிபாலகி திருமதி எல். சுஜேந்திரன், பிரதம மருந்தாளர் பி.சுதர்ஜினி, பிரதான சுகாதார முகாமைத்துவ உதவியாளர் திருமதி ரோஸி சுகுமார், வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். நிகழ்ச்சியை சுகாதார கல்வி பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி என்.மனோஜினி தொகுத்து வழங்கியிருந்தார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# பெருமளவு கணையான் மீன்கள் அம்பாறை ஆற்றோரங்களில்





(பாறுக் ஷிஹான்)

திடீர் காலநிலை மாற்றம் காரணமாக அதிகளவான கணையான் மீன் இனங்கள் அம்பாறை மாவட்டத்தின் பிராந்திய ஆற்றோரங்களில் பிடிபடுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக கடலை நோக்கி ஓடும் நீரோடைகள் ஆறுகளில் இருந்து 3 வகையான கணையான் வகை மீன்கள் கரைவலைகள் கட்டுவலைகள் தூண்டில்கள் மூலம் பிடிக்கப்பட்டு பல ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

சுமார் 5 முதல் 25 கிலோ எடையுள்ள பாரிய கணையான் மீன் இனங்களே இவ்வாறு மீனவர்கள் பிடித்து வருகின்றனர்.

இவ்வகையான மீன்கள் ரூபா 1000 முதல் 9 ஆயிரம் வரை விற்பனையாகி வருவதுடன் பொதுமக்களும் ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வருகின்றனர்.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை நிந்தவூர் பாலமுனை அட்டாளைச்சேனை பகுதிகளில் இவ்வாறான மீன் வகைகள் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை மீனவர்கள் பிடிக்கப்படும் கணையான் மீன்களை பால் கணையான், செங்கணையான், முள்கணையான் என வகைப்படுத்தி விற்பனை செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (05)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பசும்பால் விற்பனை நிலையம்

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை, கிழக்குப்பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் நலன் கருதி 'ஆரோக்கியா பாலகம்' எனும் பெயரிலான பசும்பால் மற்றும் பால்சார் உற்பத்திகளின் விற்பனை நிலையம் இன்று (வியாழக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

பல்கலைக்கழக பதிவாளர் அ.பகிரதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார். கிழக்குப் பல்கலைக்கழக தொழிநுட்ப பீட பீடாதிபதி பேராசிரியர் த.மதிவேந்தன், கூட்டுறவுச் அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் கே.வி.தங்கவேல், பல்கலைக்கழக நிதியாளர் எம்.எம். பாரிஸ், மாணவர் விவகாரங்கள் திணைக்கள சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எம்.எப்.எம்.மர்சூக் மற்றும் பல அதிகாரிகளின் பங்குபற்றலுடன் நிகழ்வு நடைபெற்றது.

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்களிடத்தில் தூய பசும்பால் அத்துடன் பால் உற்பத்திகளின் பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில், மட்டக்களப்பு கொம்மாதுறை கால்நடை அபிவிருத்தி, பால் சேகரிப்பு, கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் இவ்விற்பனை நிலையத்தை முன்னெடுத்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# கல்முனை இஸ்லாமாபாத் வித்தி பொங்கல் பெருவிழா நிகழ்வு





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தை அடிப்படையாகக் கொண்டு பல்லின சமய கலாசார நிகழ்வுகளை மாணவர்களின் மத்தியில் அறிமுகப்படுத்தும் எண்ணக்கருவிற்கமைவாக கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் ஆலோசனை வழிகாட்டல் பிரிவால் பொங்கல் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம். றிசாத் தலைமையில் நடைபெற்றது.

மாணவர்கள் மத்தியில் இன நல்லிணக்க மற்றும் பரஸ்பர உறவுகளைப் பேணும் இந்தத் திட்டத்திற்கு ஆசிரியர் எம்.சீ.ஹிஜாஸ் அனுசரணை வழங்கியதோடு, இந்நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்டவர்களுக்கு பொங்கல் வழங்கப்பட்டதோடு, இதன் மூலம் மாணவர்களுக்கு மத்தியில் பல்லினசமய கலை, கலாசார பண்புகள் தொடர்பான சிறந்த மனப்பதிவுகளை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு, தமிழ் மக்களின் பண்பாடுகள் தொடர்பான சிறப்பம்சங்களை உணர்த்த முடிந்தமை இந்நிகழ்வின் வெற்றியாகும். (05)

### ஒவ்வொரு பகுதிக்கும் தனித் தனிச் சட்டம் என்றால்

# வடக்கு கிழக்கைப் பிரித்து தனி நாடாகத் தரவேண்டும்

### கருணாகரன் எம்.பி. தெரிவிப்பு

தெற்குக்கு ஒரு சட்டம், வடக்கு -கிழக்கிற்கு ஒரு சட்டம் என்று இலங்கை அரசு நடந்துகொள்ளுமாக இருந்தால் வடக்கு, கிழக்கை பிரித்து தனிநாடாக தர வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவேந்தல் செய்தமைக்கு எதிராக 2022ஆம் ஆண்டில் தொடரப்பட்ட வழக்கு விசாரணையின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கோ. கருணாகரன் மேலும் தெரிவித்ததாவது:

1987ஆம், 1991ஆம் ஆண்டு கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்ட 152 பேருக்காக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் ஜனவரி 28 வருடா வருடம் நினைவேந்தல் செய்வது வழக்கம்.

2022 ஜனவரி 28 போல நானும் எனது கட்சி உறுப்பினர்கள் உட்பட பலர் சென்று நினைவேந்தலுக்கு விளக்கேற்றினோம். எந்தவிதமான தடை உத்தரவும் கிடைத்திருக்கவில்லை. அதன் பின்னர், எனக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸுக்கும் பொலிஸார் நீதிமன்ற தடை உத்தரவு வழங்கினர்.

2021, 2022, 2023, 2024 விளக்கேற்றினோம். எந்த விதமான பிரச்சினையும் இல்லை. ஆனால், 2022 கோட்டாபய ராஜபக்ச ஆட்சியில் இருந்த காலத்தில், அவரின் உத்தரவின் பெயரில் தடை உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

இந்த நாடு ஒரு ஜனநாயக நாடு. ஆனால் இந்த நாட்டிலே ஒரே சட்டம் இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இந்த நாட்டை ஆள வருகின்ற ஆட்சியாளர்கள், அரசுத் தலைவர்கள் தாங்கள் நினைத்ததையே சட்டமாக்கிக்கொள்கிறார்கள்.

இந்த நாட்டில் ஜனநாயகம் இருக்கின்றதா? அல்லது ஒரே நாடு என்ற சட்ட முறை இருக்கின்றதா? எதுவுமில்லை என்பதை மக்கள் உணரவேண்டும்.

தெற்கில் இந்த நாட்டில் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்திய ஜே.வி.பி. மட்டும் தங்களது தலைவர்கள் மற்றும் இறந்தவர்களுக்கு பல்கலைக்கழகங்களில் சிலை வைத்து நினைவுகூரலாம் என்றால் ஏன் வடக்கு, கிழக்கில் இறந்தவர்களை நாங்கள் நினைவுகூர, விளக்கேற்ற முடியாது?

ஒரே நாட்டில் ஒரே சட்டத்தை பேணி பாதுகாக்க முடியாவிட்டால், ஒரே நாடு தேவையில்லை. அந்த நிலைமைக்கு நீங்கள் எங்களை தள்ளிவிடுகின்றீர்கள். தெற்கிலே நடைபெறுவது வடக்கு கிழக்கிலும் நடைபெற வேண்டும். ஒரே நாடு ஒரே சட்டமாக இருந்தால் இப்படியான தொந்தரவுகளைக் கொடுக்கக்கூடாது.

தமிழ்த் தேசியத்துடன் இணைந்திருக்கும் தலைவர்கள் தங்கள் மக்களுக்கு அஞ்சலி செலுத்தக்கூடாது என அச்சுறுத்தி எம்மை நிறுத்திவிடமுடியாது. எங்களுக்காக உயிர் நீத்தவர்களைத் தொடர்ச்சியாக நாங்கள் நினைவுகூருவோம். அவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக இறந்தவர்கள். அதில் பொதுமக்களும் சிக்குண்டு உயிரிழந்துள்ளனர்.

எத்தனை அச்சுறுத்தல்கள் வந்தாலும், எத்தனை பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தாலும், தொடர்ச்சியாக நினைவேந்தல்களில் ஈடுபட்டுக்கொண்டே இருப்போம். அதைச் செய்யவேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது - என்றார்.

# தமிழ் மக்களை தன் சப்பாத்து காலால் மிதித்து அடிமைப்படுத்துகிறார் ரணில்

### முன்னணியின் அமைப்பாளர் குற்றச்சாட்டு

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களைத் தனது சப்பாத்து காலால் மிதித்து அடிமைபடுத்திக்கொண்டிருக்கிறார் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் 2022ஆம் ஆண்டு நினைவேந்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் பொலிஸார் தொடுத்த வழக்கு விசாரணைக்காக புதன் கிழமை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றுக்கு வந்திருந்தார் சுரேஸ். வழக்கு முடிந்த பின்னர் நீதிமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு முழுவதும் நீதிமன்றங்களை பொலிஸார் பிழையாக வழிநடத்திக்கொண்டிருக்கின்றனர். சட்டத்துக்கு முரணான விடயங்களுக்கு வடக்கு, கிழக்கில் அனுமதி கொடுக்கப்படுகின்றது.

ஆனால் எங்களுடைய உறவுகளை நினைவுகூருவதற்கு தடை விதிக்கப்படுகின்றது. வடக்கு, கிழக்கில் வருடாவருடம் இது நடந்துகொண்டிருக்கின்றது.

மாறி வருகின்ற அதிகாரத்திற்கு வரும் ஆட்சியாளர்கள் தம்மைத் தக்கவைப்பதற்காக தமக்கு ஏற்ற சட்டங்களைப் பிறப்பித்து, தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைக் குரல்களை நசிக்கி வருகின்றன.

ரணில் விக்கிரமசிங்க - ராஜபக்ச ஆட்சியை நிலை நிறுத்துவதற்காக 5 சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றில் நிகழ்நிலை காப்புச் சட்டம் பிரதானமானது. அது தமிழ் மக்களின் குரலை நசிக்கும் சட்டம்.

இந்த ஜனாதிபதி உலகத்துக்கு ஜனநாயகக் குரலையும் நல்லிணக்கத்தையும் காட்டிக்கொண்டு வடக்கு, கிழக்கு தமிழ் மக்களைத் தனது சப்பாத்து காலால் மிதித்து அடிமைபடுத்திக்கொண்டிருக்கிறார். இதனை எமது மக்களும் சர்வதேசமும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் இனப் படுகொலையை உடன் நிறுத்தவேண்டும் என தென் ஆபிரிக்க சர்வதேச நீதிமன்றில் கோர, அந்த அறிக்கையை ரணில் ஆதரிக்கிறார் என்றால் இவரின் இரட்டை வேடம் சர்வதேச மட்டத்தில் எந்தளவுக்கு இருக்கிறது என்பதை மக்களும் புத்திஜீவிகளும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

1948இல் இந்த நாட்டில் இருந்து ஆங்கிலேயர்கள் வெளியேறிய பின்னர், சிங்கள ஆட்சியாளர்களிடம் இந்த அதிகாரம் போனது. அன்று முதல் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களைத் தொடர்ந்து அடிமைப்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

தமிழர்கள் இந்தத் தீவில் அடிமைத்தனத்திலிருந்து விடுபடும்வரை தமிழ் மக்களின் உரிமைக்குரலை எவரும் நசுக்க முடியாது. எந்தத் தடை வந்தாலும் தொடர்ந்து பயணிப்போம் - என்றார்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

காலைக்கதிர் Kalaikkathir

# 4 தூதுவர்கள் பதவியேற்பு

இலங்கைக்குப் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் உயர் ஆணையடர்கள் மற்றும் தூதுவர்கள் மூவர் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தமது நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர்.

எசுவாத்தினி இராஜ்ஜியத்தின் உயர்ஸ்தானிகர், கிரிகிஸ், ருமேனியா, துர்க்மெனிஸ்தான் நாடுகளின் புதிய தூதுவர்களே இவ்வாறு புதிதாக நியமனம் பெற்றுள்ளனர்.

அதனடிப்படையில், எசுவாத்தினி இராஜ்ஜியத்தின் உயர்ஸ்தானிகராக மென்சி சிபோ டிலாமினி, ருமேனியா தூதுவராக ஸ்டெலுடா அர்ஹைறர் அஸ்கர் கிரிகிஸ் குடியரசின் தூதுவராக பெஷிமோவ்வும் துர்க்மெனிஸ்தானின் தூதுவர் ஷலர் கெல்டினசரோவ் ஆகியோரே நியமனத்தை கையளித்தவர்களாவர்.

வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்டவர்களும் இதன்போது கலந்துகொண்டனர்.

அதனையடுத்து நியமனம் பெற்ற உயர்ஸ்தானிகரும் தூதுவர்களும் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.





### தனியார் பஸ் உரிமையாளர்களின் பிரச்சினைக்கு

# தீர்வு காணப்படாவிட்டால் பஸ் கட்டணமும் உயரும்

தனியார் பஸ் சங்கங்களின் கோரிக்கைகளுக்குத் தீர்வு காணப்படாவிட்டால் எதிர்வரும் இரண்டு வாரங்களில் பஸ் கட்டணங்கள் 10 சத வீதத்தால் அதிகரிக்கப்படும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன நேற்று எச்சரித்தார்.

புதன்கிழமை நள்ளிரவு முதல் டீசல் விலை 5 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் குறைந்தபட்ச பஸ் கட்டணம் 35 ரூபாவாகவே இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சிஐடியிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்களை ஆராய்ந்த மாளிகாகந்த நீதிவான், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிற்கு வெளிநாட்டு பயணத்தடை விதித்ததுடன், குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சென்று வாக்குமூலம் வழங்கும்படி உத்தரவிட்டார்.

## நீதிமன்றத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிக்காட்டியிருந்தோம்.

அதன் பின்னர் அந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் தான் தற்போது சபாநாயகர் அச்சட்டத்தினை சான்றுரைப் படுத்தியுள்ளார்.

சட்டத்தின் இறுதி உள்ளடக்கம் இன்னமும் கிடைக்கவில்லை. ஆனால்இப்போதும்ஐந்துவிடயங்கள் அதில் உள்ளடக்கப்படவில்லை என்று அறிய முடிகின்றது. ஆகவே சபாநாயகர் சான்றுரைப்படுத்திய சட்டத்தின் உள்ளடக்கத்தினை எதிர்பார்த்துள்ளோம்

இறுதி உள்ளடக்கத்திலும் உயர் நீதிமன்றம் குறிப்பிட்ட விடயங்கள் காணப்படாது விட்டால் அது பெரும் சட்டப்பிரச்சனையை உருவாக்கும் - என்றார்.

## சிறீதரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கட்சியாக இருப்பதுடன் பொதுச் சின்னத்தயும் கொண்டுள்ளோம். இந்த அடிப்படை விடயங்களையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் மேற்கொள்ளவேண்டும் என்று நாம் முன்னர் வலியுறுத்தி வந்தோம்.

அது நடக்கவில்லை. பதிலாக தமிழ் அரசுக் கட்சி கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. ஆகவே சிறீதரன் ஒற்றுமையை விரும்புவாராக இருந்தால் எமது அணியில் இணைந்து கொள்ள முடியும். அதன் பின்னர்சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் அணியினரும் மீண்டும் எம்மோடு இணைவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

ஆதன் மூலமாக கடந்த காலத்தில்22உறுப்பினர்களை பெற்றதுபோன்று மீண்டும் அதனை பெற்றுக்கொள்ள முடியும். அதன் மூலம் எமது பலத்தினை சர்வதேசத்துக்கு காண்பிக்க முடியும் என்றார்.

# பிணை

முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்லவை கைது செய்யாமைக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது கைதான 10 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்லவை கைதுசெய்யாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் புதன்கிழமை கொழும்பு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு முன்பாக அமைதியான முறையில் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 10 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர். அவர்களைக் கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிணையில் விடுவித்துள்ளது.

# மது விற்பனைக்கு பெப். 4 விடுதலை

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்படும் என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெபரவரிமாதம்4ஆம்திகதிஇடம்பெறவுள்ளஇலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இவ்வாறு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்படும் என மது வரித் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.02.2024இல் வெளியிடப்பெற்றது.